பக்கங்கள்: 15 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 ஆவணி 26 சனிக்கிழமை 11.09.2021 கதிர் 310

## இது ரகசியம் அல்ல!

மத்திய வங்கி ஆளுநர் தேச மான்ய பேராசிரியர். டபிள்யூ.டி. லக்ஷ்மன் தமது பதவியை இராஜி னாமச் செய்கின்றார். இது எதிர் பார்க்கப்பட்ட ஒன்றுதான்.

அவர் இலங்கையின் மூத்த பேராசிரியர் பொருளாதார விட யங்களின் பெரிதும்

பக்கம்02

## கொரோனாத் தொற்றால் மேலும் 131 பேர் மரணம்!

### 11 ஆயிரத்தை நெருங்கியது மொத்தக் காவு

இலங்கையில் மேலும் 131 பேர் கொரோனாத் தொற்றால் நேற்றுமுன்தினம் உயிரிழந் துள் ளனர் என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன்படி நாட்டில் பதிவான கொரோனாச் சாவுகளின் மொத்த எண்ணிக்கை 10 ஆயி ரத்து 995 ஆக அதிகரித்துள்ளது.

நேற்றுமுன்தினம் உயிரிழந் தவர்களில் 58 பெண்களும், 73 ஆண்களும் உள்ளடங்குகின் றனர் என்று அரசதகவல் திணைக் களம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

## 2,832 பேருக்கு நேற்று தொற்று

இலங்கையில் நேற்று 2 ஆயிரத்து 832 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையா ளம் காணப்பட்டுள்ளனர்.

இதையடுத்து நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப் படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 4 இலட்சத்து 80 ஆயிரத்து 468

15

## செப். 21ஆம் திகதி வரை ஊரடங்கு மேலும் நீடிப்பு

### ஜனாதிபதி கோட்டா அறிவிப்பு



இலங்கையில் தற்போது அமுலில் இருக்கும் தனிமைப் படுத்தல் ஊரடங்கு மேலும் ஒரு வாரத்துக்கு நீடிக்கப்பட்டுள்ளது என ஜனாதிபதி கோட்டாபய ராஜ பக்ஷ அறிவித்துள்ளார்.

இதன்படி

2

### ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளருக்கு

# சம்பந்தன் அனுப்பிய கடிதம்; அனைவரும் ஏற்கவில்லை!

### இப்படி சிறிதரன் எம்.பி. நேற்று தெரிவிப்பு



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் ஆணையா ளருக்கு அனுப்பிய கடிதம் தொடர்பிலும், அதிலுள்ள விட யங்கள் தொடர்பிலும் நாங்கள் எல்லோரும் ஏற்றுக் கொண் டோம் என்று இல்லை.

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளு மன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்தார்.

15

## கிளிநொச்சியில் நேற்று மூவர் பலி

கிளிநொச்சியில் உயிரிழந்த மூன்று பேருக்கு நேற்று கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் போதனா வைத் தியசாலையில் மேற்கொள்ளப் பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் குறித்த நபர்களுக்குத்

2

## காணாமல்போன மீனவர் மன்னாரில் சடலமாக மீட்பு

(ந.லோகதயாளன்)

புத்தளம் கடற்பரப்பில் மீன் பிடிக்கச் சென்று காணாமல் போன மீனவர் ஒருவர் நேற்று மதியம் மன்னார் – முசலி பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள சிலாவத்துறை – சவேரியார்புரம் கடற்கரையிலிருந்து சுமார் 500 மீற்றர் தொலைவில் கடலில் சட லமாகக் கண்டு

2

## யாழில் இரட்டைக் குழந்தைகளை பிரசவித்த தாய் தொற்றால் சாவு!

(எஸ்.நிதர்ஷன்,ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணத்தில் இரட்டைக் குழந்தைகளைப் பிரசவித்த தாயார் கொரோனாத் தொற்றால் பரிதாபகரமாக உயிரிழந்துள் ளார்.

இணுவிலைச் சேர்ந்த அஜந் தன் இனியா (வயது – 25) என்ற பெண்ணே இவ்வாறு யாழ்ப்பா ணம் போதனா வைத்தியசாலை யில் உயிரிழந்துள்ளார்.

குழந்தைகள் இருவரும் யாழ்ப் பாணம் போதனா வைத்தியசா லையில் மருத்துவக் கண்காணிப் பில் உள்ளனர்.

கடந்த 4ஆம்

15

## குடாநாட்டில் மேலும் 6 பேர் காவு; 10 நாள்களில் 62 பேர் உயிரிழப்பு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் மேலும் 6 பேர் கொரோனாத் தொற்றால் உயிரிழந்துள்ளனர். இதன்மூலம் செப்டெம்பர் மாதத் தின் முதல் 10 நாள்களில் 62 பேர் கொரோனாத் தொற்றால் உயிரிழந்துள்ளனர்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்ற இணுவிலைச் சேர்ந்த 25 வயதுடைய பெண் ஒருவர் இரட்டைக் குழந்தைகளை பிரச வித்த நிலையில் உயிரிழந்துள் ளார்.

அத்துடன் யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையைச் சேர்ந்த 60 வயதுடைய பெண் ஒருவரும், பருத்தித்துறையைச் சேர்ந்த 78 வயதுடைய ஆண் ஒருவரும் யாழ்.போதனா

2

### யாழ்.பல்கலை பட்டமளிப்பு;

## பதக்கங்களுக்கு விண்ணப்பித்த மாணவர்களுக்கான அறிவித்தல்

(இ.கலையமுதன்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழ கப் பட்டமளிப்பு விழாவில் வழங் கப்படும் பேராசிரியர் அ. துரை ராஜா ஞாபகார்த்த தங்கப் பதக் கம் மற்றும் பேராசிரியர் க. குண ரட்ணம் ஞாபகார்த்த தங்கப் பதக் கம் ஆகிய தங்கப் பதக்கங்க ளுக்குத் தகுதி பெற்ற – அவற்றுக் காகத் தமது விண்ணப்பங்க ளைச் சமர்ப்பித்திருக்கும் மாண வர்களைத் தமது விண்ணப்பங் கள் கிடைக்கப் பெற்றமையை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளுமாறு யாழ். பல்கலைக் கழக கல்வி விவகாரங்கள் மற் றும் ஆய்வு,

2

## காரைநகரில் ஊரடங்கு வேளை திருமணம்; கலந்துகொண்ட 35 பேருக்குக் கொரோனோ

(இ.கலையமுதன்)

யாழ்ப்பாணம் காரைநகர் பகுதியில் ஊரடங்கு வேளை யில் திருமண நிகழ்வை நடத் திய நிலையில் திருமணத்தில் கலந்துகொண்ட 13 சிறுவர்கள் உள்ளிட்ட 35 பேருக்குக் கொரோனோ வைரஸ் தொற்று உறுதியாகியுள்ளது.

காரைநகர் பகுதியில் கடந்த முதலாம் திகதி , ஊரடங்கு அமு லில் உள்ள வேளை பந்தல் அமைத்து திருமண நிகழ்வு நடை பெற்றது. குறித்த திருமண நிகழ் வில் கலந்துகொண்டவர்கள் சுகாதார விதிமுறைகளைப் பேணாது நடந்துகொண்டுள் ளனர்.

அதேவேளை, திருமணத் தில் எடுத்துக்கொண்ட குழுபுகைப் படங்கள் உள்ளிட்ட படங்களை யும் முகநூலில் அன்றைய தினமே திருமணத்தில் கலந்து கொண்ட ஒரு சிலர் பகிர்ந்து கொண்டனர்.

அதில் சுகாதார விதிமுறைக ளைக் கடைப்பிடிக்காது பலர் திருமணத்தில் கலந்துகொண் டமை உறுதியானதை அடுத்து சுகாதாரப் பிரிவினர்

2

## பாடசாலைகளை ஆரம்பிப்பது குறித்து ஆராய தொழில்நுட்பக் குழு நியமனம்

இலங்கையில் கொரோனாத் தொற்றுப் பரவல் காரணமாக பாடசாலைகள் நீண்ட காலமாக மூடப்பட்டிருப்பதால் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் குறித்த நேற்று ஜனா திபதி கோட்டாபய ராஜபக்ஷ தலை மையில் நடைபெற்ற கொரோனா பரவலைக் கட்டுப்படுத்துவதற் கான செயலணிக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது.

இதன்போது, நாட்டில் இலட் சம் வரையிலான சிறுவர்களின் ஆரம்பக் கல்வி மற்றும் இதே போன்ற எண்ணிக்கையிலான சிறுவர்களின் முன்பள்ளி கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள் ளமை தொடர்பில் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

இவ்வேளையில், பாடசாலை களை மீண்டும் திறப்பது குறித்து கல்விசார் அதிகாரிகளுடன் ஜனாதிபதி கலந்தாலோசித்தார்.

நாட்டில் 100 இற்கும் குறை வான மாணவர்களைக்

15

## வவுனியாவில் நேற்று 4 பேர் தொற்றால் பலி

(வவுனியா நிருபர்)

வவுனியா மாவட்டத்தில் கொரோனாத் தொற்றால் மேலும் 4 பேர் நேற்று மரணமடைந்துள் ளனர் என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

கொரோனாத் தொற்று காரண மாக சிகிச்சை பெற்று வந்த, தொற்றுக்குள்ளான நிலையில் வீடுகளில் தனிமைப்படுத்தப் பட்டிருந்த மற்றும் தொற்றுக்குள் ளான நிலையில் வீடுகளில் இருந் தோர் என்று நான்கு பேர் கொரோ னாத் தொற்றால் மரணமடைந் துள்ளனர்.

தோணிக்கல்,

2

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மதிக்கப்பட்ட ஓர் அறிவுசார் நிபுணர்.

மனவேதனை, விரக்தியுடன்தான் அவர் பதவி விலகுகின்றார். அவர் செவ்வாய்க்கிழமை யுடன் தாம் ஆளுநர் பதவியிலிருந்து விலகுகின்றார் எனத் தெரிவிக்கும் கடிதத்தை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு அவர் அனுப்பி விட்டார்.

ஏற்கெனவே அவருக்கும் அரசுத் தலைமைக்கும் இடையில் பொருளாதாரக் கொள்கைக் கோட்பாட்டு விடயங்களில் விரிசல் ஏற்பட்டிருந்தது. அடுத்த மாதம் தமக்கு எண்பது வயதாகும் போது அதைக் காரணம் காட்டி பதவி விலகும் எண்ணத்தில்தான் அவர் இருந்தார்.

"பொருளாதார – அரசியல் கொள்கைக் கோட்பாடுகள் இடையே பெருத்த முரண்பாடு இருக்கின்றது. அதன் காரணமாக நான் பதவியிலிருந்து விலக விரும்பினேன். ஆனால் ஓரிரு மாதங்கள் முந்தியே – நேரத்துடனேயே – நான் பதவி விலக வேண்டிய சூழ்நிலை வந்து விட்டது." – என்ற அவர் கூறினார்.

நாட்டின் மத்திய வங்கியின் பதினைந்தாவது ஆளுநராகப் பதவி வகித்து, அவர் பதவி விலகுகின்றார்.

இராஜாங்க அமைச்சர் அஜித் நிவார்ட் கப்ராலை மீண்டும் மத்திய வங்கி ஆளுநராக நியமிக்கும் எண்ணத்துடன்தான் பேராசிரியர் லக்ஷ்மனை அப்பதவியிலிருந்து விலக்குமாறு ஜனாதிபதி தரப்பு கோரியது எனக் கூறப்படுகின்றது.

2019 டிசெம்பர் 24 ஆம் திகதி மத்திய வங்கி ஆளுநராகப் பதவியேற்ற பேராசிரியர் லக்ஷ்மன் இலங்கை நாணய நிதியம், மத்திய வங்கி ஆகியவற்றின் தலைவர் பதவிகளையும் வகித்தவர்.

அரசியல்வாதியாகி விட்ட அஜித் நிவார்ட் கப்ரால், எம்.பி. மற்றும் இராஜாங்க அமைச்சர் பதவிகளை இராஜினாமாச் செய்துவிட்டு மத்திய வங்கி ஆளுநர் பதவியை ஏற்பதை சர்வதேச நாணய நிதியம் வரவேற்கவில்லை என நேற்று இப்பத்தியில் தெரிவித்திருந்தேன்.

இருக்கும் மத்திய வங்கி ஆளுநர் மூத்த பொருளாதார நிபுணர். தமது எண்பதாவது வயதில் மத்திய வங்கி ஆளுநர் பதவியிலிருந்து விலகும் அவருக்கு சர்வதேச நாணய நிதியம் உடனடியாகவே முக்கிய பதவி ஒன்றை அளித்து அவரது சேவையைப் பெற்றுக்கொள்ள இருப்பதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

எங்கள் தோட்டத்து மல்லிகையின் மணம், மாற்றானுக்கு மணக்கின்றது. அதன் வாசம் எங்கள் வீட்டை நிர்வகிப்பவர்களுக்குத் தெரியவில்லை. அதுதான் துரதிர்ஷ்டம்.

★ ★ ★

மஹிந்த ராஜபக்ஷ தம்பதியர் இத்தாலிக்குச் சென்றிருக்கின்றனர். ஒரு முக்கிய நிகழ்ச்சியில் பங்குபற்ற என்று கூறப்பட்டது.

ஆனால் சுமார் பத்து நாள்கள் வரை அவர்கள் அங்கு தங்கியிருக்கும் இடம் உலகின் மிக முக்கிய சுற்றுலா மையம். இன, சன, குடும்பப் பந்தங்களுடன் பயணித்துள்ளனர் என்றும் தகவல். பாவம் மனுசன், கொஞ்சம் ரெஸ்ட் எடுத்துக் கொள்ளட்டுமே...!

இதற்கிடையில், வரும் 19ஆம் திகதி ஜனாதிபதி கோட்டாபாய ராஜபக்ஷ அமெரிக்கா செல்கின்றார். ஐ.நா. பொதுச் சபையின் கூட்டத்தில் பங்குபற்றுவதற்காக என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இது கொரோனாப் பெருந்தொற்றுக் காலம். இந்தப் பேரிடர் சமயத்தில் பல நாடுகளின் தலைவர்களும் தத்தமது ஆளணி, படை பட்டாளங்களுடன் ஒரே சமயத்தில் ஐ.நா. தலைமையகம் அமைந்திருக்கும் நியூயோர்க்கிற்குப் படை எடுப்பதை அமெரிக்க அதிகாரிகளே விரும்பவில்லையாம். அதனால் தமது தூதரங்கள் மூலம் பல்வேறு நாடுகளின் தலைவர்களுக்கும் உத்தியோகப்பற்றற்ற முறையில் அதைத் தெரிவித்து வருகின்றனர். ஐ.நா. பொதுச் சபைக் கூட்டத்தில் நாடுகளின் தலைவர்கள் மெய்நிகர் முறையில் பங்குபற்றவும் பரிந்துரைக்கப்பட்டு வருகின்றது எனத் தெரிகின்றது.

ஆனால், இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அமெரிக்கா செல்ல விரும்புகின்றார். தமக்குப் பிறந்த மகன் வயிற்றுப் பேரக் குழந்தையையும், மகனையும் மருமகளையும் பார்ப்பதுதான் விசிட்டின் முதல் நோக்கமாம். அடுத்தது தான் ஐ.நா. அமர்வு.

பாவம், நாட்டின் தலைவர் என்றாலும் அவருக்கும் குடும்பம், பிள்ளை, குட்டிப் பாசம் இருக்கத்தானே செய்யும்.

நாடு கொரோனாப் பேரிடரில் மூழ்கிக் கிடக்கின்றது. நாட்டின் ஜனாதிபதியும் பிரதமரும் – அண்ணனும் தம்பியும் – இப்படி 'ட்ரிப்' அடிக்கலாமா என்று பொது மகன் கேட்கும் கேள்விக்குத்தான் பதில் சொல்ல முடியாமல் இருக்கின்றது.

★ ★ ★

ஒவ்வொரு நாளும் தொடர்ந்து கூட்டமைப்பு – தமிழரசு – குழப்பம் குறித்து இப் பகுதியில் எழுத அது திகட்டிப்போய் சில வாசகர்கள் திட்டுகின்றார்கள். அதனால் இன்று ஒருநாள் இடைவேளை. அதற்காகவும், சில வாசகர்கள் திட்டுவார்கள். அவர்களிடம் மன்னிப்புக் கோருகிறேன். நாளை பார்ப்போம்.

– மின்னல் –

---

## காரைநகரில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

புகைப்பட ஆதாரங்களின் அடிப்படையில் திருமணத்தில் கலந்துகொண்டவர்களை அடையாளம் கண்டு தனிமைப் படுத்தினர்.

அதேவேளை, ஊரடங்கு அமுலில் உள்ள வேளை சுகாதார விதிமுறைகளை மீறி திருமணம் நடத்தப்பட்டமை தொடர்பில் ஊர்காவற்துறை நீதிவான் நீதிமன்றில் சுகாதாரப் பிரிவினர் வழக்குத் தாக்கல் செய்தனர்.

அதனடிப்படையில் நீதிமன்றக் கட்டளைக்கு அமைவாக கடந்த செவ்வாய்க்கிழமை திருமணத்தில் கலந்துகொண்டவர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

பரிசோதனை முடிவில் 5 வயது தொடக்கம் 15 வயதுக்கு உட்பட 13 சிறுவர்கள் உள்ளடங்கலாக 35 பேருக்குக் கொரோனோத் தொற்று உறுதியாகியுள்ளது.

இதேவேளை, நீதிமன்ற கட்டளைக்கு அமைவாக பி.சி.ஆர். பரிசோதனையை முன்னெடுக்க முயன்றபோது சுகாதார வைத்திய அதிகாரி, பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஆகியோரைத் தாக்க முற்பட்டு அவர்களின் கடமைக்கு இடையூறு விளைவித்தார்கள் எனும் குற்றச்சாட்டில் மூன்று பேர் ஊர்காவற்துறை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

---

## குடாநாட்டில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வைத்தியசாலை விடுதியில் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளனர்.

அதேவேளை, பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்ற தொண்டமானாறு பகுதியைச் சேர்ந்த 83 வயதுடைய ஆண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

அத்துடன் பருத்தித்துறையைச் சேர்ந்த 81 வயதுடைய பெண் ஒருவரும், வல்வெட்டித்துறையைச் சேர்ந்த 82 வயதுடைய பெண் ஒருவரும் வீட்டில் உயிரிழந்த நிலையில் கொரோனாத் தொற்றுள்ளமை அறிக்கையிடப்பட்டுள்ளது.

இதன்மூலம் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 322ஆக உயர்வடைந்துள்ளது.

## செப்.21ஆம் திகதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

செப்டெம்பர் 21ஆம் திகதி அதிகாலை 4 மணி வரையில் ஊரடங்கு நீடிக்கப்பட்டுள்ளது எனவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்தும் வகையில் கடந்த ஆகஸ்ட் மாதம் 20ஆம் திகதி நாட்டில் அமுல்படுத்தப்பட்ட ஊரடங்குச் சட்டம் இதற்கு முன்னர் செப்டெம்பர் 13ஆம் திகதி வரையில் நீடிக்கப்பட்டிருந்தது.

எனினும், நேற்றுக் காலை ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற கொரோனாத் தடுப்புச் செயலணிக் கூட்டத்தில், தற்போதைய கொரோனாத் தொற்று நிலைமையைக் கருத்தில்கொண்டு ஊரடங்கை மேலும் ஒரு வாரத்துக்கு நீடிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

தற்போது அமுலில் உள்ள தனிமைப் படுத்தல் ஊரடங்குச் சட்டத்தை மேலும் சில வாரங்களுக்கு நீடிக்க வேண்டும் என்று அரச வைசாத்திய அதிகாரிகள் சங்கத்தினர் தொடர்ந்து வலியுறுத்தி வந்தனர்.

எவ்வாறாயினும், நாளாந்தக் கொரோனாத்தொற்றாளர்எண்ணிக்கை, கொரோனா மரண எண்ணிக்கை ஆகியவை குறைந்து வருகின்றன எனவும், தொடர்ந்தும் நாட்டை முடக்கிவைக்க முடியாது எனவும் பொருளாதார வல்லுநர்கள் சுட்டிக்காட்டியிருந்தனர்.

இந்நிலையில், தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் எதிர்வரும் 21ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அதிகாலை 4 மணிவரை தொடர்ந்து அமுல்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன், அத்தியாவசிய சேவைகளுக்கும் தொடர்ந்து அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

---

## பதக்கங்களுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வெளியீட்டுக் கிளையின் உதவிப் பதிவாளர் கோரியுள்ளார்.

பட்டமளிப்பு விழாவில் வழங்கப்படும் பேராசிரியர் அ. துரைராஜா ஞாபகார்த்த தங்கப் பதக்கம் மற்றும் பேராசிரியர் க.குணரட்ணம் ஞாபகார்த்த தங்கப் பதக்கம் ஆகிய தங்கப் பதக்கங்களுக்கு மாணவர்களிடம் இருந்து கடந்த ஆகஸ்ட் மாதம் விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன. எனினும், கடந்த மாதம் முதல் அமல் படுத்தப்பட்டிருக்கும் தனிமைப்படுத்தல் ஊரடங்கு நடைமுறை காரணமாக தபால் மூலத் தொடர்பாடல்களில் மந்த நிலை ஏற்பட்டிருப்பதனால் தபால் மூலமாகத் தமது விண்ணப்பங்களை அனுப்பிய மாணவர்கள் திங்கட்கிழமை முதல் வெள்ளிக்கிழமை வரையான அலுவலக நேரத்தினுள் நேரடியாக அல்லது 0212226500 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றமையை உறுதிப் படுத்திக் கொள்ளுமாறும், விண்ணப்பத்தின் பிரதியை அல்லது தபால் மூலம் அனுப்பப்பட்டமையை உறுதிப்படுத்தும் ஆவணங்களை aracauniv.jfn.ac.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறும் யாழ். பல்கலைக்கழக கல்வி விவகாரங்கள் மற்றும் ஆய்வு, வெளியீட்டுக் கிளையின் உதவிப் பதிவாளர் கோரியுள்ளார்.

---

## காணாமல்போன...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பிடிக்கப்பட்டுள்ளார்.

குறித்த மீனவர் புத்தளம் – வத்தளங்குன்று பகுதியைச் சேர்ந்த ராமையா ஜேசுதாசன் (வயது 47) என்று தெரியவந்துள்ளது.

சிலாவத்துறைப் பகுதியைச் சேர்ந்த மீனவர்கள் நேற்றுக் காலை மீன்பிடிக்கக் கடலுக்குச் சென்றுள்ளனர்.

இதன்போது சடலம் ஒன்று கடலில் மிதப்பதைப் கண்ட நிலையில் சிலாவத்துறை கடற்படையினருக்குத் தகவல் வழங்கினர்.

கடற்படையினர், மீனவர்கள் ஆகியோரின் உதவியுடன் நேற்று மதியம் குறித்த சடலம் மீட்கப்பட்டு கரைக்குக் கொண்டு வந்தனர்.

குறித்த மீனவர் கடந்த 8ஆம் திகதி புத்தளம் கடற்பரப்பிலிருந்து மீன்பிடிக்கக் கடலுக்குச் சென்ற நிலையிலேயே காணாமல்போயுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சிலாவத்துறைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

---

## வவுனியாவில் நேற்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கூமாங்குளம், மதவுவைத்தகுளம் மற்றும் ஓமந்தை ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களே இவ்வாறு கொரோனாத் தொற்றால் மரணித்தவர்களாவார்கள்.

இந்நிலையில், மரணித்த 4 பேரினதும் உடல்களையும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி தகனம் செய்ய சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

---

## கிளிநொச்சியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

சிவசம்பு தியாகராசா (வயது 79), முத்தையா விசுவலிங்கம் (வயது 57), அருட்பிரகாசம் லூசியா புஸ்பமலர் (வயது 74) ஆகியோரே உயிரிந்த நிலையில் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று மருத்துவ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.







காலைக்கதிர் Kalaikkathir

## சட்டவிரோத கசிப்பு உற்பத்தி நிலையம் மட்டக்களப்பில் முற்றுகை; ஒருவர் கைது

மட்டக்களப்பு மாவட்டத்தின் ஆயித்தியமலை பொலிஸ் பிரிவில் சட்டவிரோத கசிப்பு உற்பத்தி நிலையம் ஒன்று பொலிஸாரால் முற்றுகையிட்டதில் ஒருவர் கைது செய்யப்பட்டதுடன் கசிப்பு, கோடா பரல்கள் போன்றவையும் மீட்கப்பட்டன என ஆயித்தியமலை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கே.எம். ஆர்.எஸ்.கோணர தெரிவித்துள்ளார்.

ஆயித்தியமலை கற்பானைக் குளம் காட்டுப் பகுதியில் சட்டவிரோதமான முறையில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டபோது புலனாய்வுப் பிரிவின் இரகசிய தகவலுக்கமைவாக கடந்த வியாழக்கிழமை மேற்கொண்ட சுற்றிவளைப்பில் மூன்று பரல் கோடா, 25 லீற்றர் கசிப்பு மற்றும் சில பொருள்களுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என ஆயித்தியமலை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கே.எம். ஆர்.எஸ்.கோணர தெரிவித்துள்ளார். கைது செய்யப்பட்ட நபரையும், கசிப்பு உள்ளிட பொருள்களையும் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## தனியார் நிறுவனம் ஒன்றின் தலைமை அதிகாரி கைது!

தேசிய மருந்துகள் ஒழுங்குப்படுத்தல் அதிகாரசபையின் தரவுகளை முகாமை செய்யும் நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி குற்றப்புலனாய்வு திணைக்களத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

தனியார் நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

தேசிய மருந்துகள் ஒழுங்குப்படுத்தல் அதிகாரசபையின் தரவுகள் அழிந்தமை தொடர்பில் அவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## விறகுவெட்ட காட்டுக்கு சென்ற யுவதி ஐந்து நாள்களின் பின் கண்டுபிடிப்பு

நுவரெலியா, பூண்டுலோயா - டன்சினன் பகுதியில் காணாமல்போன 25 வயதான இளம் யுவதி கண்டுபிடிக்கப்பட்டுள்ளார்.

குறித்த யுவதி கடந்த ஐந்தாம் திகதி விறகு வெட்ட சென்ற நிலையிலேயே காணாமல்போயுள்ளார் என ஆரம்பக்கட்ட விசாரணைகளில் இருந்து தெரிய வந்திருந்தது.

இந்த நிலையில் காணாமல்போன தனது மகள் பல நோய்களுக்காக மருத்துவ சிகிச்சை பெற்று வருகிறார் எனவும், முன்னர் சில சந்தர்ப்பங்களில் அவர் காணாமல் போனார் எனவும் நுவரெலியா பொலிஸாரிடம் தாய் தெரிவித்திருந்தார்.

இதனைத் தொடர்ந்து குறித்த யுவதியை தேடும் பணிகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்ட நிலையில் நேற்று கிளியாவ பகுதியில் வைத்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அம்பாந்தோட்டையில் துறைமுகம் என்றால் கொழும்பில் இருப்பது நீச்சல் தடாகமா?

### எஸ்.எம் மரிக்கார் எம்.பி. சாட்டை



அம்பாந்தோட்டையில் துறைமுகம் இருப்பதாலேயே அந்த மாவட்டத்துக்கு பைஸர் தடுப்பூசிகளை வழங்கியதாக அரசாங்கம் தெரிவித்திருக்கின்றது.

அவ்வாறெனில் ஏற்றுமதி, இறக்குமதி வர்த்தகத்தின் பிரதான தளமாக விளங்குகின்ற துறைமுகமொன்று நாட்டின் தலைநகரான கொழும்பில் அமைந்திருப்பது அவர்களின் கண்களுக்குப் புலப்பட வில்லையா? கொழும்பில் இருப்பதை நீச்சல் தடாகம் என்று அரசாங்கம் நினைத்துக்கொண்டிருக்கின்றதா? என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். மரிக்கார் கேள்வி எழுப்பியுள்ளார்.

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக ஒப்பீட்டளவில் கொழும்பில் வாழும் மக்களே வெகுவாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். ஆகவே, கொழும்புவாழ் இளைஞர், யுவதிகளுக்கும் பைஸர் தடுப்பூசியைப் பெற்றுக்கொடுப்பதற்கு அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

கொழும்பிலுள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமைக்காரியாலயத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு -

தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் கணினித் தரவுத்தளத்தில் காணப்பட்ட முக்கிய கோப்புகள் அழிக்கப்பட்டிருக்கின்றன எனக் கூறப்படும் விவகாரம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளுக்கு அமைவாக அதன் நிறைவேற்றுப்பணிப்பாளர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு அழிக்கப்பட்ட கோப்புகளில் மருந்துப்பொருள்களின் பெயர்கள், அவை எந்தெந்த நாடுகளிலிருந்து, என்ன விலைகளில், எந்த நிறுவனங்களால் தருவிக்கப்படுகின்றன என்பது உள்ளடங்கலாக மிகவும் முக்கிய தரவுகள் காணப்பட்டனஎனக்கூறப்படுகின்றது. எனவே, நாட்டின் அனைத்துப் பிரஜைகளுக்கும் முக்கியத்துவம் வாய்ந்த தரவுகளே இல்லாமல் போயுள்ளன.

இவ்வாறு தரவுக்கோப்புகள் பேணப்படும் போது, வருடத்துக்கு ஒருமுறை அவை மீளாய்விற்கு உட்படுத்தப்படுவது வழமையாகும். அவ்வாறெனின் 2020, 2021ஆம் ஆண்டில் தரவுகள் மீளாய்விற்குட் படுத்தப்படவில்லையா? அதற்குப் பொறுப்புக்கூறவேண்டியவர்கள் யார்? என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

அதேபோன்று இவ்வாறான முக்கிய கட்டமைப்புக்களில் தரவுகள் அழிந்தால் பாரிய தாக்கங்கள் ஏற்படும் என்பதால், அதற்கேற்றவாறான மாற்று செயற்திட்டமொன்றும் தயார் நிலையில் பேணப்படும். எனவே இங்கு அத்தகைய செயற்திட்டம் காணப்படவில்லையா? என்ற சந்தேகமும் எழுந்துள்ளது.

தற்போது அன்டிஜன் பரிசோதனைகளுக்கு அதிக கட்டணம் வசூலிக்கப்படுவதாகக் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுவரும் நிலையில், மேற்படி உரிய தரவுகள் இருந்திருந்தால் அன்டிஜன் பரிசோதனை உபகரணங்களைக் குறைந்த விலையில் வழங்குவதற்கு வேறு நிறுவனங்கள் விண்ணப்பித்திருக்கின்றனவா? என்பது குறித்து கண்டறிந்திருக்கமுடியும்.

ஆகவே நாட்டுமக்களின் நிகழ்கால மற்றும் எதிர்கால சுகாதார நலனில் தாக்கம் செலுத்தக்கூடிய இந்த அழிவடைந்த தரவுகள் தொடர்பாக உரியவாறு விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதுடன் அதனுடன் தொடர்புடைய அனைவரும் பாரபட்சமின்றித்தண்டிக்கப்படவேண்டும்.

அடுத்ததாக நாட்டில் உரப்பற்றாக்குறை ஏற்பட்டிருக்கும் நிலையில், விவசாயம் மற்றும் ஏனைய பயிர்ச் செய்கை நடவடிக்கைகளுக்கு அவசியமான உரத்துக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கின்றது.

அதன் விளைவாக நாட்டின் தேசிய உணவுற்பத்தி வீழ்ச்சியடைந்து, சந்தைக்கேள்வியுடன் ஒப்பிடுகையில் நிரம்பல் வீழ்ச்சியடையும்போதுதான் பொருள்களின் விலையேற்றம் மேலும் பாரிய நெருக்கடிக்குரிய பிரச்சினையாக மாற்றமடையும். அதனை இன்னும் 2 - 3 மாதங்களில் உணர்ந்துகொள்ள முடியும்.

மேலும் 20 - 30 வயதிற்கு இடைப்பட்டோருக்கு வழங்குவதற்கென அம்பாந்தோட்டை மாவட்டத்திற்கு பைஸர் தடுப்பூசிகள் பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கும் விவகாரம் பல்வேறு சர்ச்சைகளைத் தோற்றுவித்திருக்கும் நிலையில், அம்பாந் தோட்டையில் துறைமுகம் இருப்பதாலேயே பைஸர் தடுப்பூசிகளை வழங்கியதாக அரசாங்கம் விளக்கமளித்திருக்கின்றது.

அவ்வாறெனில் ஏற்றுமதி, இறக்குமதி வர்த்தகத்தின் பிரதான தளமாக விளங்குகின்ற துறைமுகமொன்று நாட்டின் தலைநகரான கொழும்பில் அமைந்திருப்பது அவர்களின் கண்களுக்குப் புலப்படவில்லையா? கொழும்பு மக்கள் என்ன தவறிழைத்தார்கள்? கொழும்பில் இருப்பது நீச்சல் தடாகம் என்று அரசாங்கம் நினைத்துக்கொண்டிருக்கின்றதா? கொரோனா வைரஸ் பரவல் காரணமாக ஒப்பீட்டளவில் கொழும்பில் வாழும் மக்களே வெகுவாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். ஆகவே கொழும்புவாழ் இளைஞர், யுவதிகளுக்கும் பைஸர் தடுப்பூசியைப் பெற்றுக் கொடுப்பதற்கு அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

# சத்துருக்கொண்டான் படுகொலை 31 ஆவது ஆண்டு நினைவு தினம்






மட்டக்களப்பு - சத்துருக்கொண்டான் படுகொலையின் 31ஆவது ஆண்டு நினைவுதினம் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

படுகொலை செய்யப்பட்டவர்களின் நினைவாக சத்துருக்கொண்டான் சந்தியில் அமைக்கப்பட்டுள்ள நினைவுத்தூபியருகே இந்த நினைவேந்தல் நிகழ்வு நேற்று (வியாழக்கிழமை) இடம்பெற்றது.

தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் காரணமாக சிலர் மாத்திரமே குறித்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இதன்போது, நினைவுத்தூபியில் நினைவுச்சுடர் ஏற்றப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டதை தொடர்ந்து, உயிரிழந்தவர்களின் ஆத்மசாந்திக்கான பிரார்த்தனைகளும் நடத்தப்பட்டன. குறித்த நிகழ்வில் மட்டக்களப்பு மாநகரசபையின் முதல்வர் தி.சரவணபவன், மாநகரசபை உறுப்பினர்களான கௌரி, து.மதன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

கடந்த 1990ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 9ஆம் திகதி இராணுவத்தினருடன் இணைந்து, ஊர்காவல் படையினரால் சத்துருக்கொண்டான், கொக்குவில், பிள்ளையாரடி கிராமங்களைச் சேர்ந்த கர்பிணித் தாய்மார்கள், பச்சிளம் குழந்தைகள், அங்கவீனம் அடைந்தவர்கள் என பலர் கொண்டுசெல்லப்பட்டு படுகொலைசெய்யப்பட்டனர். இதில் 5 கைக்குழந்தைகள், 42 பத்து வயதுக்கு குறைவான சிறுவர்கள், 85 பெண்கள், 28 முதியவர்கள் உட்பட 184 தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர். குறித்த படுகொலை தொடர்பாக விசாரணைகள் நடைபெற்றபோதும் இதில் சம்பந்தப்பட்டவர்களுக்கு எந்தவித தண்டனைகளும் வழங்கப்படவில்லை என இங்கு குற்றஞ்சாட்டப்பட்டது. இதேவேளை தனி மைப்படுத்தல் ஊரடங்கு சட்டம் காரணமாக தூபியில் நடைபெற்ற அஞ்சலி நிகழ்வில் மக்கள் கலந்து கொள்ளாத நிலையில் வீடுகளில் தமது உறவுகளுக்கு விளக்கேற்றி அஞ்சலி செலுத்தினார்கள்.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## தமிழரசின் முடிவு என்ன?

ஈழத் தமிழர்களுடைய தேசிய அரசியலில் மிக முக்கிய சக்தியான இலங்கைத் தமிழரசுக் கட்சியைப் பொறுத்த வரையில் மிக நெருக்கடியான ஒரு கட்டத்தை அது கடக்கின்றது.

தமிழர்களுடைய தேசிய அரசியலைக் கையாளும் பிரதான தரப்பான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அதன் வகிபாகம் மிக முக்கியமானது. கூட்டமைப்பின் பிரதான – தலைமை – பாத்திரம் தமிழரசிற்கே உரியது.

1949இல் வரலாறு எப்படி ஒரு பிறப்பாக்கத்தை அக்கட்சிக்குத் தந்ததோ, அதே வரலாறு, தமிழர்களின் ஆயுதம் தாங்கிய தியாகப் போராட்டம் மூச்சிழந்தபோது, அங்கிருந்து அந்த உரிமைப் போரைத் தொடர்வதற்கான அரசியல் போராட்டத்துக்குத் தலைமை வகிக்கும் பாத்திரத்தையும் அதே தமிழரசிடம் கையளித்தது.

கடந்த பன்னிரண்டு ஆண்டுகளாக அந்த வரலாற்றுப் பொறுப்பை நிறைவேற்றுவதற்கு தமிழரசு படும்பாட்டை தமிழ் மக்கள் பார்த்து வேதனைப்படும் நிலைமைதான் மிச்சம். உருப்படியாக ஏதும் நடந்தேறின என்று திருப்திப்படுவதற்கு இல்லை. தமிழரசின் தலைமையிலும் வழிகாட்டலிலும் ஒரே தடுமாற்றங்கள், குழப்பங்கள், பின்னடைவுகள், களேபரங்கள்.

இதனால், மக்கள் மத்தியில் தனது செல்வாக்கையும், தான் தலைமை வகிக்கும் தமிழ்க் கூட்டமைப்பிற்கான ஆதரவையும் அது கொஞ்சம் கொஞ்சமாக இழந்து வருவது கண்கூடு.

அதை மீளக் கட்டியெழுப்ப வேண்டிய பொறுப்பு தமிழரசுத் தலைமைக்கு உண்டு. இரண்டு தளங்களிலே அது விடயங்களைக் கையாள வேண்டியிருக்கின்றது.

ஒன்று – எழுபத்தியிரண்டு வருடங்கள் பழமையான தனது கட்சியை – கட்டமைப்பை – ஒழுங்குமுறையான, கட்டுக்கோப்பான, நேர்மைத் திறனுடன் செயற்படுகின்ற ஒரு மக்கள் இயக்கமாக கடைத்தேற்றுவது.

மற்றது – தான் தலைமை வகித்து, பிரதான பங்களிப்பு வழங்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஒழுங்குமுறையாக கட்டுறுதியாக வழி நடத்துவது.

தமிழர்களின் தேசிய அரசியலை முன்கொண்டு செல்வதில் இரண்டாவது விடயம் கல்லைக் கட்டிக்கொண்டு நீந்துவது போல இடைஞ்சல் தருமாக இருந்தால், அந்தக் கல்லைக் கழற்றி விட்டு விட்டு, தனித்துத் துணிச்சலுடன் நீச்சலடித்து, தமிழர்களைக் கரையேற்ற – கடைத்தேற்ற – தமிழரசு முன்வரவேண்டும்.

தமிழரசின் தலைவர், செயலாளர், பேச்சாளர் (துணைச் செயலாளர்), சிரேஷ்ட துணைத் தலைவர், நிர்வாகச் செயலாளர் ஆகிய ஐவரும் நேற்று ஒன்றுபட்டு, ஒரு குரலில், செய்தியாளர் மாநாட்டில் தோன்றிக் கருத்து வெளியிட்டமை கட்சியின் ஐக்கியம் – ஒற்றுமை – தலைமைக் கட்டமைப்பு ஆகியவற்றுக்கு நல்ல ஒரு எடுத்துக் காட்டுத்தான். கட்சியின் பெருந்தலைவர் இரா.சம்பந்தனும், மற்றொரு துணைத் தலைவர் செல்வராசாவும், யாழ்ப்பாணத்தில் இல்லை. நேற்றைய பத்திரிகையாளர் மாநாட்டிற்கு அவர்கள் இருவரும் கூட ஆதரவு தந்துள்ளமை தமிழரசுத் தலைமையின் உறுதிப்பாட்டுக்கு வலிமைதான்.

கட்சிக்குள்ளும், கட்சிக்கு வெளியில் கூட்டமைப்புக்கும் ஆப்படிக்க முயலுவோருக்கும் தலைமையின் இந்த ஐக்கிய நிலைப்பாடு ஒரு நல்ல செய்திதான்.

தமிழர்களின் தேசிய அரசியலில் முக்கிய விடயமான ஜெனீவா விவகாரத்தில் கட்டுப்பாட்டு ஒழுங்குகளை மீறி, கட்சிக்குள்ளும், கூட்டமைப்புக்குள்ளும் இரு வெவ்வேறு தரப்புகள் குசும்பு பண்ண முயன்றமை உரிய நடவடிக்கைக்கு உரியது. இவ்விடயத்தில் ஐக்கியம் என்ற பெயரில் விவகாரங்களை மூடி மறைத்து, மக்களைப் 'பேய்க்காட்ட' தமிழரசுத் தலைமை முயலக் கூடாது. தனது தலைமைத்துவ உறுதியை அது வெளியில் காட்ட வேண்டியது முக்கிய விடயம்.

கட்சிக்குள், இவ்விவகாரத்தில் தனித்துப் போக முன்ற தரப்பினர், கூட்டமைப்புக்குள் இவ்விடயத்தை ஒட்டி ஏற்பட்டுள்ள நெருக்கடியைப் புரிந்து கொண்டு, தமது செயற்பாட்டிலிருந்து பின்வாங்கத் தீர்மானித்தபோதும், அக்குழுவுக்குள் இருந்த சில பிரகிருதிகள் கட்சிக்கும் சேர்த்து எள்எண்ணெய் எரித்து விட்டமை தமிழரசின் துரதிஷ்டம். இவர்களை எல்லாம் கட்சிக்குள் சேர்த்து எதைக் கண்டோம் என்பதை தமிழரசு மீளச் சிந்தித்துப் பார்ப்பது நல்லது.

எது, எப்படியோ, இவ்விடயங்களில் தமிழரசின் உறுதியான நிலைப்பாட்டை – ஒழுங்கு நடவடிக்கை முடிவை – தமிழ் மக்கள் எதிர்பார்க்கின்றனர். நழுவல் – வழுவல் – மூடிமறைப்பு – சமாளிப்புகளை அல்ல.

## பிரதமரின் வெளிநாட்டு விஜயத்திற்கு கர்தினாலின் அனுமதி பெற வேண்டுமா?

### நவ சிங்கள ராவய காட்டம்

பிரதமர் வெளிநாட்டு விஜயத்தை மேற்கொள்வதற்கு மெல்கம் ரஞ்சித் கர்தினால் ஆண்டகையின் அனுமதியை பெற வேண்டுமா? கர்தினால் நாட்டின் உள்ளக பிரச்சினையை சர்வதேசத்துக்கு கொண்டு செல்ல முயன்றால் அவர் நாடாளுமன்ற உறுப்பினர் சம்பந்தனாக கருதப்படுவதுடன், கத்தோலிக்க சபை தமிழ் தேசியக் கூட்டமைப் பாகவும் கருதப்படும். தாய் நாட்டுக்கு எதிராக செயற்படுபவர்கள் தேசத்துரோகிகளாகக் கருதப்படுவார்கள் என நவ சிங்கள ராவய அமைப்பின் செயலாளர் மாகல்கந்தே சுதந்த தேரர் தெரிவித்தார்.

நவ சிங்கள ராயவ அமைப்பில் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்–

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் இத்தாலி விஜயம் தொடர்பாக மெல்கம் ரஞ்சித் கர்தினால் ஆண்டகை குறிப்பிட்டுள்ள கருத்துக்கள் வெறுக்கத்தக்கனவாகக் காணப்படுகின்றன.

பிரதமர் வெளிநாடுகளுக்கு செல்வதற்கும், சர்வதேச மாநாடுகளில் கலந்துகொள்வதற்கும், வத்திக்கான் செல்வதற்கும் மெல்கம் ரஞ்சித் கர்தினால் ஆண்டகையிடம் அனுமதி பெற வேண்டுமா ? ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் சம்பவ விவகாரத்தை திசைதிருப்பும் முயற்சியை கர்தினால் முன்னெடுக்கிறார். பிரதமரும், வெளிவிவகார அமைச்சரும் ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் சம்பவத்தை மூடிமறைக்கும் வகையில் பரிசுத்த பாப்பரசரை சந்திக்கவுள்ளனர் என கர்தினால் எவ்வாறு குறிப்பிட முடியும்.

கர்தினாலுடன் பேச்சில் ஈடுபட ஜனாதிபதி அவருக்கு அழைப்பு விடுத்த போதும் அவர் நிபந்தனை விதித்து பேச்சை மறுத்துள்ளார். இதன் பின்னணியில் அரசியல் இலாபம் உள்ளதுஎன்பதைகுறிப்பிடவேண்டும்.ஏப்ரல் 21குண்டுத்தாக்குதலில் உயிரிழந்தவர்களை வைத்து அரசியல் செய்வதை கர்தினால் தவிர்த்துக் கொள்ள வேண்டும். - என்றார்.

## யாழில் ஒரு வயது குழந்தை சாவு; கொரோனா வைரஸ் தொற்றுறுதி!

யாழ்ப்பாணம் - தெல்லிப்பழை வைத்தியசாலையில் காய்ச்சல் காரணமாக சிகிச்சைக்காக சேர்க்கப்பட்ட ஒரு வயதான குழந்தை, சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளது.

இந்த நிலையில் குறித்த குழந்தைக்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக சுகாதார பிரிவு தகவல்கள் தெரிவிக்கின்றன.

தெல்லிப்பழை பெரியபுலம் பகுதியை சேர்ந்த ஒரு வயதான குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஊரடங்குச் சட்டத்தை பயன்படுத்தி ஐஸ் போதை கடத்திய மூவர் கைது

### மோட்டார் சைக்கிளும் மீட்பு

தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டத்தைப் பயன்படுத்தி ஐஸ் போதைப் பொருளைக் கடத்திய மூவர் ஏறாவூர் பகுதியில் கைது செய்யப்பட்டுள்ளனர் என மட்டக்களப்பு மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி ஐ.பி.பண்டார தெரிவித்துள்ளார்.

கடந்த வியாழக்கிழமை மாலை இடம்பெற்ற இக் கைதில் கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட மோட்டார் சைக்கிளும் மீட்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது 16 ஆயிரம் மில்லி கிராம் கேரளா கஞ்சா, 400 மில்லி கிராம் ஐஸ் ஆகியவற்றுடன் மூவர் கைது செய்யப்பட்டுள்ளமையுடன், அவர்களிடமிருந்து மோட்டார் சைக்கிளும் மீட்கப்பட்டுள்ளது.

போதைப்பொருள்களும் கைதான நபர்களும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர்எனப்பொலிஸார் தெரிவித்துள்ளார்.

## வெளிநாட்டு துப்பாக்கியுடன் குடும்பஸ்தர் ஒருவர் கைது

கேகாலை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கேகாலை நகரில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பில், வெளிநாட்டுத் துப்பாக்கி ஒன்றுடனும், 9 மில்லி மீற்றர் ரக துப்பாக்கி ரவைகள் ஒன்பதுடன் நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கேகாலை பிரதேசத்தைச் சேர்ந்த 50 வயதுடைய குடும்பஸ்தரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

குறித்த நபரை நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தவுள்ள பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.




## ஒரு தொகுதி ஸ்புட்னிக் வி அடுத்தவாரம் வருகிறது

ரஷ்யாவிடமிருந்து அடுத்த வாரம் மேலும் ஒரு தொகை ஸ்புட்னிக் வி தடுப்பூசிகள் இலங்கைக்கு கிடைக்கவுள்ளன.

இவ்வாறு கிடைக்கும் தடுப்பூசிகள் முதலாவது தடுப்பூசியை பெற்றுக்கொண்டவர்களுக்கு வழங்கப்படும் என இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

ஒரு லட்சத்து 20 ஆயிரம் பேர் இதுவரை ஸ்புட்னிக் வி தடுப்பூசியின் முதலாவது டோஸை பெற்றுக் கொண்டுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

‘கம்பவாரிதி’ இலங்கை ஜெயராஜ் தமது ‘உகரம்’ இணையத்தளத்தில் ‘பாட்டும் நானே! பாவமும் நானே!’ என்ற தலைப்பில் வாராந்தம் வரையும் கேள்வி - பதில் பகுதி ‘காலைக்கதிர்’ நாளிதழில் ஒவ்வொரு வாரமும் வெளியாகி வாசகர்களின் அறிவுக்கு தீனியாகிறது.

# பாட்டும் நானே? பாவமும் நானே!




**1. கேள்வி:-** உமக்குக் கரிநாக்கையா! சென்ற முறை வந்த கேள்வி - பதிலில் தமிழ்க் கட்சிகள் ஒன்று சேருமா என்று ஐயம் தெரிவித்திருந்தீர். அதே போல் நடந்துவிட்டதே?

**பதில் :-** நடந்த ஒன்றை வைத்து நடக்கப் போகும் ஒன்றை ஊகிப்பதற்கு அனுமானப் பிரமாணம் என்று பெயர். அந்த அனுமானப் பிரமாணத்தை வைத்துத்தான் சென்ற முறை பதில் எழுதியிருந்தேன். நம் தமிழ்க் கட்சிகளுக்கு தமிழ் மக்களின் பிரச்சினையை விடத் தம் கட்சிகளின் பிரச்சினைதான் பெரிதாகப் போய்விட்டது. நாடாளுமன்றத்திற்குள் தொடர்ந்து தாம் இருப்பதற்குத் தேவையான மக்களின் அங்கீகாரம், இலாபந்தரக்கூடிய பதவிகளுக்கான போட்டி போன்றவைதான் நம் தமிழ்க் கட்சிகளுடைய இன்றைய பிரச்சினைகள். அதனால் முக்கிய பிரச்சினைகளில் தம்மைத் தனித்து இனங்காட்டத்தான் அவர்கள் விரும்புவார்கள் என்பதை, என்னால் அல்ல ஒரு குழந்தையால் கூடக் கணித்துச் சொல்ல முடியும். அந்தக் கணிப்பைத்தான் முன்பு சொல்லியிருந்தேன். தம் சிறுமையால் நம் தலைவர்கள் என்னைத் தீர்க்கதரிசியாக்கியிருக்கிறார்கள். சுருக்கமாகச் சொல்ல வேண்டும் என்றால். ‘கரி என் நாக்கில் இல்லை. நம் தலைவர்களின் மனதில் தான் இருக்கிறது.

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁎ ஒற்றுமை நீங்கின் அனைவர்க்கும் தாழ்வு.**

**2 கேள்வி: -** சித்தார்த்தனும், அடைக்கலநாதனும் ஐ. நா. மனித உரிமைப் பேரவைக்கான கடிதத்தில் மாற்று அணியினருடன் இணைந்து நின்றிருப்பது பற்றி?



**பதில்:-** ‘கற்பு’ என்று ஒரு சொல் தமிழில் இருக்கிறது. அந்த கற்பு என்றால் என்ன என்ற கேள்விக்கு நம் ஔவைப் பாட்டி இலக்கியமாய்ப் பதில் சொல்லியிருக்கிறாள். ‘ஒருவனைப்பற்றி ஓரகத்திரு என்பது கற்பிற்கு ஔவைதந்த வரைவிலக்கணம். யாரோடு வாழப் போகிறேன் என்பதை ஆராய்ந்து முடிவு செய்து ஒருவனது கரங்களைப் பற்றிக் கொள்ள வேண்டும். பின்னர் சரியோ, பிழையோ வரும் பிரச்சினைகளை வீட்டுக்குள் இருந்து தீர்த்துக் கொள்ள வேண்டும். இதுதான் கற்புள்ளவர் செய்யும் செயலாம். அடைக்கலநாதனும், சித்தார்த்தனும் ஆராய்ந்து முடிவு செய்யாமல் கரம் பற்றி விட்டார்கள். கரம் பற்றிய கணவன் மீது அவர்களுக்கு நம்பிக்கை இல்லை. அதனால் கணவனுக்கும் அவர்கள் மேல் நம்பிக்கை இல்லாமல் போய்விட்டது. நடந்த முதல் தவறு இது! இத் தவறால் எழும் பிரச்சினைகளை அவர்கள் ‘வீட்டுக்குள் இருந்து தீர்க்க நினைக்காமல் அடிக்கடி வெளியே வந்து தீர்க்க நினைக்கிறார்கள். இது இரண்டாவது தவறு! சுருங்கச் சொன்னால் தமிழர் இலக்கணப்படி இவ் இருவர்க்கும் ‘கற்பு இல்லை’ என்பது தெளிவாகிறது. கற்பில்லாத பெண்ணை, கணவன் மட்டுமன்றி ஊரும் மதிக்காது என்பதுதான் உண்மை.

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁎ ஐவருக்கு நெஞ்சும்! எங்கள் அரண்மனைக்கு வயிறும்!’...ஹீ...ஹீ.... ஹீ...எப்புபுபுடீ....?**

**3 கேள்வி:-** யாழ். பல்கலைக்கழகத் தமிழ்த்துறையை இவ்வளவு கடுமையாக விமர்சித்திருக்கிறீர்களே! உங்களுக்கும் அவர்களுக்கும் அப்படி என்னதான் பிரச்சினை? கௌரவ கலாநிதிப் பட்டத்திற்கு உங்களை அவர்கள் சிபாரிசு செய்ய வில்லை என்ற கோபமா?



**பதில் :-** உங்களைப் போன்றவர்களால்தான் நம் தமிழினத்தில் தீமைகள் வளர்கின்றன. உங்களுக்கு நான் சொல்வதிலும் பிரச்சினை இல்லை. அவர்கள் செய்வதிலும் பிரச்சினை இல்லை. உண்மைகளைப் பிரச்சினையாக்கிப் பொழுது போக்க வேண்டும் என்பது தான் உங்கள் நோக்கம். நான் தமிழ்த்துறைகள் பற்றிச் செய்த விமர்சனங்கள் அத்தனையும் நிஜம்! நான் சொன்னவற்றில் ஏதாவது ஒன்றை பிழை என்று உங்களால் சொல்ல முடியுமா? உங்களால் மட்டுமில்லை, அங்குள்ளவர்களாலும் அவற்றைப் பிழை என்று சொல்ல முடியாது. அதனால்தான் நான் இவ்வளவு வெளிப்படையாய்ச் சொன்ன பிறகும் ‘எருமை மாட்டில் மழை பெய்தது போல அத்தனை பேரும் ‘அமசடக்கமாய் பேசாமல் இருக்கிறார்கள். இனி எனக்கோ, என்னைச் சார்ந்தவர்களுக்கோ பின்னால் குழி வெட்டிப் பழி தீர்க்க முயல்வார்கள். முன்பும் அப்படித்தான் நடந்தது. அவர்களால் முடிந்தது அவ்வளவுதான். உங்களைப் போன்றவர்கள் என்னிடம் இத்தகைய ‘விழல் கேள்விகள் கேட்பதை விட்டுவிட்டு அவர்களிடம் அவர் இப்படிப் பகிரங்கமாய்ச் சொல்லுகிறாரே, அதற்கு உங்கள் பதில் என்ன என்று கேளுங்கள். இனம் உயரும்.

எனக்கான கௌரவ பட்டத்திற்குச் சிபாரிசு செய்யாத கோபமா என்று கேட்டிருக்கிறீர்கள். குறை விளங்காவிட்டால் ஒன்று சொல்வேன். எனது குளியலறையில் நாக்கு வழிக்கப் பல கருவிகள் இருக்கின்றன. அதற்கு மேலாக எதற்கு இந்தப் பட்டம்?

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁎ வாரிதியாரின் பதில் சரியாய்த்தான் இருக்கிறது. ஆனாலும் திமிர் ரொம்பத்தான் திமிறுகிறது! ..ஹீ...ஹீ.... ஹீ....**

**4 கேள்வி:-** கொரோனா பிரச்சினையைக் கையாள நியமிக்கப்பட்ட கொவிட் ஒழிப்புச் செயலணியில் இருந்து மருத்துவ நிபுணர்கள் பலர் அடுத்தடுத்து இராஜினாமா செய்கிறார்களே?

**பதில்:-** மானமுள்ள அதிகாரிகள்! பதவி, பணம், இவற்றுக்கப்பால் தம் தொழிலுக்கு நேர்மை செய்ய விரும்புகிறார்கள் போல. ‘நிற்க அதற்குத் தக என்ற வள்ளுவனின் வாக்கினையும் ‘உம்மை அறிந்தோ நாம் தமிழை ஓதினோம் என்ற கம்பனது வாக்கினையும் நினைக்கச் செய்கிறார்கள். நம் இனத்தார் படிக்க வேண்டிய ஆளுமை அடையாளம் இது. திசை நோக்கி வணங்கத் தோன்றுகிறது.

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁎ நல்லார் ஒருவர் உளரேல்...?**

**5 கேள்வி: -** நல்லூர்த் திருவிழாவை நல்லபடி நடத்தி முடித்துவிட்டார்களே?



**பதில்:-** பாராட்ட வேண்டிய விடயம் தான்! நல்லூர் எஜமானர்கள் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்பவற்றில் தமக்கென ஓர் தனி இடம் பிடித்தவர்கள் என்பதைச் சொல்லவும் வேண்டுமா? அடாது மழை பெய்தாலும் விடாது குடை பிடித்துத் தம் கடமையைச் செய்து முடித்திருக்கிறார்கள். பக்தர் கூட்டம் இல்லை என்பதைத் தவிர, மற்ற அனைத்தும் வழமை போல் சிறப்பாக நடந்திருக்கின்றன. இது அவர்களின் பரம்பரை நிர்வாகத் திறமையின் அடையாளம். ஆனாலும் நல்லூரானை வழி வழி வணங்கும் ஓர் அடியானாய், என் மனதில் நிறைவிற்குப் பதிலாய் ஏக்கமே எஞ்சி நிற்கிறது. என்னைப் பொறுத்தவரை மக்களில்லாத திருவிழா என்பது, தாலி இல்லாத கல்யாணம், உப்பில்லாத விருந்து, சுருதி இல்லாத கச்சேரி என்பவை போலத்தான் இருக்கிறது. அடுத்த வருடமேனும் முருகன் இரங்குவானா?

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁎ ‘வேல் உண்டு வினை தீர்க்கும்’!**

**6 கேள்வி: -** ஊரடங்குச் சட்டம் இம்முறை வெறும் பெயருக்குத்தான் நடைமுறைப்படுத்தப்படுகிறதா?

**பதில்:-** இது அரசாங்கத்தை எதிர்ப்போர் சொல்லும் குற்றச்சாட்டு. இதனை முழுமையாய் நான் ஏற்கமாட்டேன். வெளியில் நின்று எவரும் சுலபமாய் விமர்சிக்கலாம். நிர்வாகத்தை நடத்துபவர்களுக்குத்தான் அதன் சங்கடங்கள் தெரியும். இராணுவத்தை ஏவி, ஒரே நாளில் ஒருவர் கூட வீதியில் இறங்காதபடி செய்வது, நம் அரசுக்கு ஒன்றும் பெரிய காரியம் இல்லை. அப்படிச் செய்தாலும் விமர்சிக்கிறவர்கள், இது இராணுவ ஆட்சி என விமர்சிக்கத்தான் போகிறார்கள். வசதியானவர்களுக்கு முழுமையான ஊரடங்கு ஒரு பிரச்சினை இல்லை. ஆனால் அவர்கள் மட்டும் சமூகமாக மாட்டார்கள். அன்றாடம் உழைத்து உண்ணுகிறவர்கள் தொகைதான் நாட்டில் அதிகமாய் இருக்கிறது. முழுமையான ஊரடங்கு அவர்களைப் பட்டினிச்சா வரை கொண்டு சென்றுவிடும். ஊரடங்கால் கொரோனாவைக் கட்டுப்படுத்தவும் வேண்டும். அதே நேரத்தில் ‘அன்றாடம்காய்ச்சிகளின் வாழ்வையும் உறுதி செய்ய வேண்டும். ஒன்றுக்கொன்று முரணான இந்தச் சமன்பாட்டைத் தீர்ப்பது கடினமான விடயம் என்பதை நாம் ஒத்துக் கொண்டுதான் ஆக வேண்டும்.

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁎ ‘பீப் பீப் பீப் .......’ யாரோ ஒத்தூதுமாப் போல் கேட்கிறதே ?**

**7 கேள்வி:-** நாடாளுமன்ற வாக்களிப்புகளில் தலைவர் ஒருபக்கமும் உறுப்பினர்கள் ஒருபக்கமுமாக வாக்களிப்பதும், கேட்டால் மனச்சாட்சிப்படி வாக்களிக்க அனுமதித்ததாகச் சொல்வதும் சிறுபிள்ளைத்தனமாக இல்லையா? முஸ்லிம் காங்கிரஸ் எங்கே போய்க் கொண்டிருக்கிறது?



**பதில்:-** சிதறிக் கிடந்த முஸ்லிம் மக்களை, தனது ஆளுமையாலும், நிர்வாகத் திறனாலும், தீர்க்கதரிசனச் செயற்பாடுகளாலும் ஒன்று திரட்டி, பேரின அரசுகளோடு சரிக்குச் சமமாய் நின்று முஸ்லிம் மக்களின் உரிமைகளை வென்றெடுத்த மாபெரும் தலைவர் அஷ்ரப் அவர்களை நினைத்துப் பார்க்கிறேன். அவரது அகால மரணம், முஸ்லிம் மக்களின் எழுச்சிக்கு எதிராக நடந்த விதியின் செயலேயாம்.

அத்தகைய ஒரு பெரும் தலைவன் திடீரென மறைந்தால் அந்த இடத்தில் குழப்பங்கள் விளைவது சகஜம்தான்.

இராமாயணத்தில் ‘வாலி’ என்கின்ற ஆற்றல் நிறைந்த வானர அரசன் இறந்த பின்பு, நான் உன்னோடு உடன் வந்து அடிமை செய்யப் போகிறேன் என்கிறான் அறிவாளியாகிய அனுமன். அதற்கு இராமன், ஆற்றல் மிக்க ஓர் தலைவன் இருந்து ஆண்ட மண்ணில் திடீர் என அத்தலைவன் மறைந்தால் அவ்விடத்தில் பல குழப்பங்கள் விளையும். ஆகவே அறிவாளியாகிய நீ இங்கே தான் இருக்க வேண்டும் என்கிறான்.

மு.கா.வின் தற்போதைய நடவடிக்கைகள் இராமன் சொன்ன கூற்றை நிஜமாக்குமாப்போல் தெரிகின்றன. தலைவர் ஒரு பக்கமும், உறுப்பினர்கள் ஒருபக்கமுமாக வாக்களிப்பது விளையாட்டு வேலை. மனச்சாட்சியின் படி வாக்களிப்பு என்று சொல்லி வாக்காளர்களின் காதில் பூ சுற்றுகிறார்கள். அரசு, மக்கள் என எல்லோரையும் திருப்திப்படுத்தும் முயற்சி இது. எல்லோரையும் திருப்திப்படுத்த நினைக்கிறவன் ஒருவரையும் திருப்திப் படுத்தமாட்டான் என்பது அனுபவச் செய்தி.

இவர்களின் நடவடிக்கையால் இரண்டு ஐயங்கள் உண்டாகின்றன. ஒன்று, எல்லோருமாகச் சேர்ந்து நாடகம் போடுகிறார்களோ என்பது. மற்றது தலைவர் ரவூப் ஹக்கீமின் கையை விட்டு ‘வண்டில் மாடுகளின் மூக்கணாம் கயிறு’ நழுவத் தொடங்கிவிட்டதோ. என்பது இதில் எது உண்மை என்பதைக் காலம் விரைவில் வெளிப்படுத்தும்.

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁎ நாடகம் விடும் நேரம்தான் உச்சக்காட்சி நடக்குதம்மா.**

எஸ்.டி. சிவநாயகம் நினைவுப் பகிர்வு

# தமிழ் ஊடகத்துறையின் ஜாம்பவான் எஸ்.டி.எஸ்.!

அங்கம் -72

ந.வித்தியாதரன்

தாம் மறைவதற்கு ஆறு வருடங்களுக்கு முன்னர் இலங்கை வானொலிக்கு எஸ்.டி.சிவநாயகம் ஐயா அளித்த பேட்டியின் தொகுப்பில் ஒரு பகுதியை நேற்றுப் பார்த்தோம். எஞ்சிய பகுதி இன்று பிரசுரமாகின்றது. பேட்டி கண்டவர் புவனலோஜினி. அதைத் தொகுத்தவர் மூத்த பத்திரிகையாளர் ஷண். பேட்டியைத் தொடர்ந்து பார்ப்போம்.

கேள்வி:- இலங்கையில் தமிழர் கலைகள், தமிழ்க் கலைஞர்களுக்கு உங்கள் பத்திரிகைச் சேவை மூலம் ஏற்பட்ட முன்னேற்றங்கள் பற்றிக் கூற முடியுமா?

பதில்:- அதாவது கலைஞர்கள் எப்பொழுதும் ஓர் நொய்தான பிராணிகள் என்று கூடச் சொல்லலாம். அதாவது அவர்களை நாங்கள் தாக்கி விட்டால் அவர்கள் ரொம்ப வேதனை அடைவார்கள். அவர்களைத் தூக்கி விட்டால் உற்சாகப்படுவார்கள்.

ஒரு கலைஞனுக்கு நீங்கள் ஆயிரம் ரூபாயைப் பரிசாகக் கொடுப்பதை விட 'நீ மிகத் திறமையாக நடித்தாய், நன்றாகப் பாடினாய்' என்று உற்சாகம் கொடுத்தால் அவருடைய மகிழ்ச்சிக்கு அளவே இருக்காது.

ஆகவே பணம் கொடுத்தோ அல்லது வேறேதாவது வகையில் ஒரு கலைஞனை ஊக்குவிப்பதை விட, பத்திரிகையிலே ஒரு விமர்சனத்தை எழுதி, அந்த விமர்சனத்தின் மூலம் அந்தக் கலைஞனைப் பாராட்டுகின்ற பொழுது அந்தக் கலைஞன் மேலும் உற்சாகமடைந்து சிறந்த முறையிலே முன்னேறுகிறான். திறமையைப் பிரதிபலிக்கிறான்.

பத்திரிகை மூலம் ஒரு கலைஞனை மிகவும் தூக்கி விடலாம். அதே போல அவனைச் சிறிது நாங்கள் தாக்கி விட்டாலோ தலை தூக்க முடியாமல் ரொம்பவும் வருந்திப் போகிறான்.

ஆகையினாலே பத்திரிகையில் விமர்சனம் எழுதுகிறவர்கள், ஒரு மலரை எடுத்து முகர்வது போலத்தான் விமர்சனம் எழுத வேண்டுமே தவிர, அதைக் கசக்கி



மணப்பது போல் விமர்சனம் எழுதக் கூடாதென்பது என்னுடைய கருத்தாக இருந்து வந்திருக்கிறது.

கேள்வி:- ஒரு பத்திரிகை ஆசிரியர் தனது தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளைத் தனது எழுத்து மூலம் வெளிப்படுத்துகிறார் என்று ஒரு வாசகர் எழுதினால் அது சரியா? தவறா?

பதில்:- அது சரி என்று நான் நினைக்க மாட்டேன். ஏனென்றால் ஒரு பத்திரிகை ஆசிரியர், அவரை ஆங்கிலத்தில் 'டுவல் பேசனாலிட்டி (Dual Personality) என்று சொல்லலாம். அதாவது அவர் இரண்டு அம்சம் கொண்டவர் அல்லது இரண்டு கூறு கொண்டவர் அல்லது இரண்டு தோற்றம் கொண்டவர் என்று சொல்லலாம். ஒரு பத்திரிகையின் ஆசிரியராக அவர் பணி புரியும் பொழுது பத்திரிகை ஸ்தாபனத்தினுடைய கருத்தை அவர் பிரதிபலிக்க வேண்டியவராக இருக்கிறார். அதே சமயம் அவருக்கு வேறுபட்ட கருத்து இருந்தால், அவர் அதைப் பத்திரிகையினுடைய தலையங்கங்கள் மூலம் தெரிவிக்க முடியாது. ஏனென்றால் அவர் ஸ்தாபனத்துக்குக் கட்டுப்பட்டவர். உதாரணத்துக்கு நான் ஒன்று சொல்லப்போனால், ஒரு வழக்கறிஞரை எடுத்துக் கொள்ளலாம்.

ஒரு வழக்கறிஞருக்கு விருப்பு வெறுப்புக் கிடையாது. அவரிடம் ஒரு கொலையாளி போய் எனக்காக வாதாடுங்கள் என்று சொன்னால் கொலையாளிக்காக அவர் வாதாடுவார்.

அதே சமயத்தில் கொலை செய்யப்பட்டவரின் உறவினர் ஒருவர் போய் எங்களுக்காக வாதாடுங்கள் என்று கேட்டால் அவருக்காகவும் அவர் வாதாடுவார். எந்தக் கட்சியிலுமே அவருக்கு விருப்பு வெறுப்புக் கிடையாது.

அது மாதிரித்தான் பத்திரிகை ஆசிரியரும், நிர்வாகம் எதைச் சொல்லுகிறதோ அதை விருப்பு வெறுப்பில்லாமல் நிறைவேற்றுவார். .

அதே சமயத்தில் அவருக்குத் தனிப்பட்ட கருத்தி



கண்ணதாசன்

ருந்தால் அதை ஆசிரியர் தலையங்கத்தில் அவர் புகுத்த மாட்டார். தனிப்பட்ட கட்டுரையாகவோ அல்லது வேறு அம்சங்களாகவோ வெளிப்படுத்துவார்.

பதில்:- வைத்தியம், ஜோதிடம் போன்ற துறைகளிலும் நீங்கள் ஈடுபாடு கொண்டவர் என்பதை உங்களது எழுத்து மூலம் எங்களுக்கு அறியக் கூடியதாக இருக்கிறது. இந்தத் துறைகளில் உங்கள் அனுபவம் பற்றிக் கூற முடியுமா?

கேள்வி:- பத்திரிகையில் என்னுடைய பெயரிலோ அல்லது புனை பெயரிலோ, ஜோதிடமோ வைத்தியமோ நான் எழுதியவனல்லன்.

நான் பிறந்த குடும்பப் பரம்பரையில் நிறைய ஜோதிடர்களும் வைத்தியர்களும் இருந்திருக்கிறார்கள். வைத்தியர்களைச் சொல்லப் போனால் ஏழு பரம்பரை என்று கூடச் சொல்லலாம் - பெருமையாக. அப்படி அவர்கள் இருந்ததினாலேதான் வைத்தியம் எங்களுக்கு வீட்டுக் கலை மாதிரி வந்தது. அதுமட்டுமல்ல, என்னைக் கூட வைத்தியராகப் பதிவு செய்வதற்கு விருப்பம் தெரிவித்து சில நண்பர்கள் என் பெயரைப் பதிவு செய்தும் கூட வைத்திருக்கிறார்கள். ஆனால் நான் அதைப் பயன்படுத்துவதில்லை.

இந்த வகையிலே நான் வைத்தியம், ஜோதிடம் பற்றி எழுதாவிட்டாலும் வெளியிலே இருந்து எழுதுபவர்களுடைய கருத்துக்களைச் சரியா, பிழையா என்று தீர்மானிக்கக் கூடிய அளவு அறிவு, ஒரு பத்திரிகை ஆசிரியர் என்ற வகையில் எனக்கு உண்டு என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன்.

கேள்வி:- கவிதைத் துறையில் உங்கள் பங்களிப்பு என்ன? நீங்கள் கவிதைகள் எழுதியதுண்டா?

பதில்:- நான் நிறையக் கவிதைகள் எழுதியிருக்கிறேன். நான் 'சுதந்திரன்' பத்திரிகையின் ஆசிரியராக இருந்த போது இந்த நாட்டில் ஏகப்பட்ட கவிஞர்களை அறிமுகம் செய்திருக்கின்றேன். இன்று இலங்கையில் சிறந்து விளங்கும் கவிஞர்களில் பெரும்பாலோர் 'சுதந்திரன்' பத்திரிகை மூலம் கவிஞர்களானவர்கள் தான். அவர்களுடைய பெயர்களை இங்கே நான் குறிப்பிட விரும்பவில்லை. அநேகமாக நூற்றுக்கு தொண்ணூறு பேர் 'சுதந்திரன்' மூலம் கவிஞராக அறிமுகப்படுத்தப்பட்டவர்கள்தான். இதற்குக் காரணமாக நான் இருக்க முடியும் என்று நினைக்கிறேன்.

ஆகையினாலே கவிதைகள் எழுதுவதில் எனக்கு நாட்டமுண்டு, கவிதைகளை ரசிப்பதிலும் மிகுந்த நாட்டமுண்டு. இதுவரை சுமார் ஐயாயிரம் கவிதைகள் வரை எழுதியிருக்கிறேன். இதில் பெரிய விஷேஷம் என்னவென்றால் எந்தக் கவிதைக்குமே நான் என்னுடைய பெயரைப் போடுவதில்லை, நான் எழுதிய கவிதைதான் இது என்று என் வாசகர்கள் அனுமானிப்பார்களே தவிர, நான் என்னுடைய பெயரைப் போட்டுக் கவிதைகளை வெளியிட்டவனல்லன். ஆரம்பத்தில் கடவுளைப் பற்றிய கவிதைகளைத் தான் நான் எழுதி வந்தேன். ஒரு முறை நானும் என்னுடைய நண்பர் ஒருவரும்



தமிழ்வாணன்

நாவலப்பிட்டியிலுள்ள கதிரேசன் கோயில் வாசலில் இருந்து கொண்டு, அவர் ஒரு கவிதை எழுத, நான் ஒரு கவிதை எழுத, இப்படியாகப் போட்டி போட்டுக் கொண்டு நூறு கவிதைகள் வரை அந்தாதி ரீதியில் அதையும் கட்டளைக் கலித்துறையில் எழுதியிருக்கிறோம். ஆகவே கவிதை எழுதுவது எனக்குக் கைவந்த கலைதான். ஆனால் வெளியே சொல்லிக் கொள்ளும் கலையல்ல அது.

கேள்வி:- வேறு எந்தெந்தத் துறைகளில் நீங்கள் ஈடுபாட்டுடன் எழுதுகிறீர்கள்?

பதில்:- பிரயாணக் கட்டுரைகள் எழுதுவதில் எனக்கு மிகுந்த விருப்பம். வேறு வேறு தேசங்களுக்கும், வேறுவேறு நாடுகளுக்கும் சென்று அங்குள்ளவற்றைப் பார்த்துப் பிரயாணக் கட்டுரைகள் எழுதுவேன். அதுவும் ஒரு புது முறையாகத்தான் இருக்கும். அதாவது நான் கண்டவற்றையும் கேட்டவற்றையும் எனக்குத் தெரிந்தவற்றையும் பிணைத்துப் போட்டால் போதும் சுமார் ஆறாயிரம் அல்லது ஏழாயிரம் பிரதிகள் (பத்திரிகை)விற்பனையில் அதிகரிப்பதுண்டு. ஆகையினாலே அந்தத் துறையில் நான் மிகுந்த ஈடுபாட்டுடன் விசேஷ நாட்டத்தோடு கட்டுரை எழுதுவதுண்டு.

அடுத்த படியாக 'பயோகிராபி' எழுத வேண்டுமென்று எனக்கொரு விருப்பம். அதாவது வாழ்க்கையிலே உயர்ந்தவர்களுடைய வாழ்க்கைச் சரித்திரங்களை, உழைப்பால் உயர்ந்தவர்கள், பணம் தேடியவர்கள் அல்லது சாதனை புரிந்தவர்கள் இப்படியான பெரியார்களுடைய வரலாறுகளை எழுத வேண்டும். அந்த முயற்சியில் தான் இப்போது ஈடுபட்டுக் கொண்டிருக்கிறேன்.

கேள்வி:- எழுத்தார்வம் கொண்டவர்களுக்கும் பத்திரிகைத் துறையில் ஈடுபட்டிருப்பவர்களுக்கும் உங்கள் பதில்கள் நிச்சயம் ஆர்வத்தை ஏற்படுத்தவே செய்யும். எழுத்தார்வம் கொண்டவர்கள் சிறந்த எழுத்தாளராவதற்கு நீங்கள் கூறும் ஆலோசனைகள் என்ன?



கல்கி

பதில்:- முதலில் ஒரு சிறந்த எழுத்தாளரை முன்மாதிரியாகக் கொள்ள வேண்டும். அவருடைய எழுத்துக்களைப் படிக்க வேண்டும். உதாரணமாகக் 'கல்கி' அவர்களை எடுத்துக் கொண்டால், அவருடைய ஒரு நாவலை எடுத்து இரண்டு பக்கங்களைப் படித்து விட்டு புத்தகத்தை மூடவும். பிறகு அவர் எழுதும் பாணியிலேயே அந்த விடயங்களை மீட்டு எழுதப் பயில வேண்டும். அதன் மூலம் இரண்டு திறமைகள் எமக்கு வரும். ஒன்று ஞாபக சக்தி, மற்றது அவர் எழுதிய பாணி. இப்படித்தான் கல்கியை வைத்துக்கொண்டு கொஞ்சக் காலம் எழுதிப் பயின்றேன். அதே போல சுத்தானந்த பாரதியாருடைய நூல்களை வைத்துக் கொண்டும் எழுதிப் பயின்றேன். இப்படியாக எழுதிப் பயில்பவர்கள் தங்களுக்குப் பிடித்தமான ஒரு ஆசிரியருடைய நூலை முன்வைத்துக் கொண்டு எழுதி வந்தால் அவர்களுக்கு அந்த எழுத்து நடை வரும். பிறகு அவர்கள் தங்களுடைய சொந்த நடைக்கு மாறிக்கொள்ளலாம்.

(13ஆம் பக்கம் பார்க்க)



இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். ‘இனப்படுகொலை’, ‘இனச்சுத்திகரிப்பு’ ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

- செல்லத்துரை ரவீந்திரன் -

அங்கம் - 127

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்


கே.பி.

**350. இவர்கள் எல்லோரும் இதனால் அழிக்கப்பட்ட பொதுமக்களைப் பற்றி அல்லது அவர்கள் அழிவார்கள் எனச் சிந்தித்தார்களா?**

இதனை நானும் போர் வலயத்தில் இருந்து வெளியேறிய பலரிடம் - வண. பிதா ஜேம்ஸ் மற்றும் அவருடன் பணிகளிலிருந்தவர்கள் பலரிடம் - கேட்டேன். அவர்கள் வேதனையைத்தான் வெளிப்படுத்தினார்கள்.

ஏப்ரல் 2009 இன் நடுப்பகுதியிலேயே தாங்கள் நிலையைக் கணித்து, தளபதிகள் நடேசன், புலித்தேவன், அவர்களோடு இருந்த போராளிகளிடம், மக்களை விடுவித்து விட்டு, நீங்கள் நின்று போராடுங்கள் என கேட்டதற்கு அவர்களில் பலர் தாங்கள் சயனைட் கட்டியிருக்கிறார்கள் எனவும், அதைக் கடித்துச் சாவோம், அது வரையும் போராடுவோம் எனச் சொன்னார்கள் எனவும், அதற்கு தாங்கள், நீங்கள் தற்கொலை செய்ய விரும்பினால் அது உங்கள் விருப்பம், அதற்காக மக்களும் சாகவேண்டும் என்று எதிர்பார்க்கக் கூடாது என்று இடித்துரைத்தார்கள் என்றும், அதே தளபதிகள் அவ்வளவு மக்களைக் காவு கொடுத்த பின் தாங்களே சரணடையக் கேட்டார்கள் என்பது விளங்கவில்லை எனவும் அனுதாபப்பட்டனர்.

இவற்றை ஈ.பி.ஆர்.எல்.எவ். இன்னொரு பார்வையில் விமர்சித்து நியாயம் கற்பித்தார்கள். இந்தியப் படைகள் வெளியேறும் போது அவர்களோடு அவர்களது கப்பல்களில் தாங்களும் மாகாண சபையையும் கலைக்காது, கைவிட்டு சென்றார்களாம். இந்தியப் படைகள் வெளியேற, விடுதலைப் புலிகள் ஸ்ரீலங்கா படையினருடன் சேர்ந்து தங்களை அழிப்பார்கள், அதற்குத் தாக்குப்பிடிக்க முடியாது, மக்களும் இடைப்பட்டு இன்னல்படுவார்கள் என்பதால் தாங்கள் வெளியேறினார்களாம். அதை, தாங்கள் மக்களை “அம்போ” என விட்டுவிட்டுக் கப்பலேறிப் போகிறார்கள் என விடுதலைப் புலிகள் பரப்புரைகள் செய்தனர். நாங்கள் அப்போது ஒருங்கிணைக்கப்பட்ட வட – கிழக்கு மாகாண சபையைவிட்டுச் சென்றோம். அதை விடுதலைப் புலிகள் பொறுப்பெடுத்து, பிரேமதாஸாவுடன் பேச்சு நடத்தி மக்களுக்கு அதிகாரப் பரவலின் அத்திபாரத்தைப் பலப்படுத்தியிருக்கலாம். அதைவிட்டு தங்களுக்காக மீண்டும் போராட்டத்தைத் தொடர்ந்து, மக்களையும் வன்னிக்குக் கொண்டு சென்று, முள்ளிவாய்க்கால் வரை சாய்த்து, கெடுபிடிக்குள் சிக்க வைத்து விட்டு, அமெரிக்க, பிரித்தானியக் கப்பல்கள் வரும் என கதை அளந்து, தாங்கள், தங்கள் தலைவர் கப்பலேறிப் போவதற்காக சாகக் கொடுத்த மக்கள் எத்தனை பேர்..? ஒரு தலைமையை காப்பாற்ற உத்திகள் தேவைதான், ஆனால் அதில் இவ்வளவு மக்கள் அழிவார்கள் எனத் தெரிந்து கொண்டே செய்வதா என்பதுதான் மனச்சாட்சியுடன் பதிலளிக்க வேண்டிய கேள்வி என்பது அவர்கள் வைத்த நியாயம்.

**351. கே.பி. நாடு திரும்பியது விமர்சனங்களுக்கு உள்ளானதா?**

அவரை நாட்டுக்குக் கொண்டு வந்தமை ஸ்ரீலங்கா தரப்பால் சிலாகிக்கப்பட்டது. கோட்டா


கோட்டாபய


றொஹான் குணரத்ன

அவரைப் பிடித்து வந்தமையால் அவர் மூலம் புலம்பெயர் புலிகளின் கட்டுமானங்கள் எல்லாம் ஒடுக்கப்பட்டு, வெளியுலகிலும் கூட அவர்கள் அழிக்கப்படுவர் என பல கருத்தாக்கங்கள் செய்யப்பட்டன.



இவற்றுக்கெல்லாம் மகுடம் வைத்தாற்போல், கே.பியைப் பற்றிச் செய்திகள், கோட்டாவை மீறி வெளியே தரக் கூடாது என்ற பணிப்புரைகள் சிறகுகள் வைத்துப் பறந்தன. போருக்குப் பின்னாலான விடுதலைப் புலிகளின் நிலையற்ற பல தரப்பட்ட மாற்றங்களினாலும், குழுக்களின் தோற்றங்களினாலும், அவர்கள் தரப்பினாலேயே ஏன் அப்படி என்று பல விமர்சனங்கள் அந்த போக்குகளுக்குக் காரணம் சொல்வதற்காக முன்வைக்கப்பட்டன.

நான் முன் கூறியவையை விட, போரின் கடைசிக் கட்டங்களில், தொலைபேசி அழைப்புகளை ஆராய்ந்தபின், கோட்டா பல தடவைகள், சிங்கப்பூர், மலேசியா, தாய்லாந்து போன்ற நாடுகளுக்குச் சென்று வந்தாரென்றும், அந்தச் சந்தர்ப்பங்களில் சிங்கள புத்தி ஜீவியான றொஹான் குணரத்தினாவின் அனுசரணையில் கே.பியையும் புலம்பெயரில் வேறு சிலரையும் சந்தித்தாரென்றும் இடைக்கதைகள் உண்டு. றொஹான் குணரத்தின பயங்கரவாதம் பற்றிய விடயங்களில் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக இருந்தார். ஆய்வுகள் எழுதினார். இதற்குள் அவருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே தொடர்புகள் இருந்தன. அதையும் இன்னும் சிலவற்றுடன் சேர்த்து, பீல்ட் மார்ஷல் சரத் பென்சேகாவுக்கு இராணுவ இரகசியங்களை வெளிப்படுத்துகிறார் எனக் குற்றம் சாட்டி சிறைவைக்க இராணுவ வட்டாரங்களிலிருந்தே பல கதைகள் வெளிக்கிட்டன. அவைகள் ஆதாரமானவைதானா என்பது காலப்போக்கிலே தான் தெரியவரலாம். அதில் ஒன்று பிரபாகரன் வெளியேற்றத்தின் பின் பிடிக்கப்பட்டு, உடனடியாக விமானத்தில் கொழும்புக்குக் கொண்டு செல்லப்பட்டு, பனாகொடையில் தடுத்து வைக்கப்பட்டார் எனவும், வெளிநாடு சென்றிருந்த மஹிந்த, அதையடுத்து ஒரு நாள் முன்னரே வெளிநாட்டிலிருந்து திரும்பி வந்தார் எனவும் ராஜபக்ஷ சகோதரர்கள், விடுதலைப் புலிகளின் வெளிநாட்டு சொத்துக்களுக்காக கே.பியின் ஊடாகப் பேரம் பேசி அவை சரிவராமற்போக, றோவிற்குச் செய்தி அனுப்பி, ராஜீவ் கொலை வழக்கில் அவரைப் பொறுப்பேற்றுக் கொண்டுபோக கேட்டு, அவர்கள் தங்களுக்குத் தேவையில்லை என்று சொல்லிவிட, அவர் திரும்பவும் போர் வலயத்திற்கு திரும்பப்பட்டு அங்கு நெற்றிப் பொட்டில் குறிவைத்து சுடப்பட்டு கொல்லப்பட்டார் எனவும், அதுவரையும் தடுத்து வைக்கப்பட்ட குடும்பத்தினரும் சாகடிக்கப்பட்டனர், அதனால்தான் அவரது நெற்றிப்பொட்டு பிளந்திருந்தது என்ற வாதங்கள் கூறப்பட்டன. இவைகள் எல்லாமே தற்பொழுது அனுமானங்களில், அச்சமயம் அங்கிருந்த இராணுவத்தினர் உளறுவதாலோ பீற்றுவதாலோ வெளிவருபவையாக இருக்கலாம்.

கடைசி நாள்கள் பற்றிய விடயங்கள் என்றோ ஒருநாள் விசாரணைக்கு வந்து, செய்மதிப் படங்கள் ஆராயப்பட்டால் அவற்றின் உண்மைகள் தெரியலாம்.

பிரபாகரனின் இறப்புக்குப் பிறகு அவரது கடைசி நாள்கள் பற்றி போர் முடிந்த சில நாள்களில் டி.பி.எஸ். ஜெயராஜ் ஒரு பதிவு செய்திருந்தார். இராணுவச் செய்திகள் பெறுவதில் அவர் வல்லவர். அவர் பிரபாகரன் இராணுவ முற்றுகையை உடைத்துக் கொண்டு வெளியேறிய முயற்சியின் போது கொல்லப்பட்டார் என்று இராணுவத்தின் செய்திகளை அடிப்படையாகக் கொண்டு அவற்றை எழுதியிருந்தார். அதற்கு அவருக்குப் பதில் தந்திருந்தேன்.

(வளரும்....)

காலைக்கதிர் Kalaikkathir

ஆக்கம் - திமாகா

இந்தவாரம் இவர்





# தனிமை ஒருவனை என்னவெல்லாம் செய்துவிடும்?

# இவான் வாசிலியேவிச் என்ற இம்சை அரசன்

தனிமை ஒருவனை என்னவெல்லாம் செய்துவிடும்? என்பதற்கு ஆதாரமாகவே உலக வரலாறு நான்காம் இவான் வாசிலியேவிச்சின் பெயரை வரவு வைத்திருக்கிறது. ஏழு மனைவிகளின் கொலை, எதிரிகளைத் துன்புறுத்த கட்டப்பட்ட பாதாள நரகம், அங்கே கொடுக்கப்பட்ட பகீர் ரக தண்டனைகள் என இவான் வாசிலியேவிச் என்னும் அரசர் இவான் தி டெரிபிள் என அழைக்கப்பட காரணமாக இருந்தது அவரது தனிமை தான். இதுவே பின்னாளில் அவரை மனநோயாளி ஆக்கியிருக்கிறது. இத்தனை சிக்கல்களுக்கும் பிள்ளையார்சுழி போட்டது இவானின் தந்தை மூன்றாம் வாசிலியின் மரணம் மிகச்சாதாரணமாய் இருந்தது.

கி.பி 1530 ஆம் ஆண்டு பிறந்த இவானுக்கு மூன்று வயதாகும்போதே தந்தையை இழந்தார். மன்னர் இறந்துவிட்டதால் இவானை அரசனாக்கினார் அவரது தாயார் எலீனா கிளின்ஸ்கையா. நிர்வாக பொறுப்புகள் அனைத்தையும் தனது நேரடி கண்காணிப்பில் வைத்துக்கொண்ட எலினாவிற்கு அரண்மனை எங்கும் எதிர்ப்புக்குரல்கள் கிளம்பத் தொடங்கின. அது 1535 ஆம் ஆண்டு யாரும் எதிர்பாராத வகையில் எலீனா கொல்லப்பட்டாள். எட்டு வயது குழந்தையாக இருந்த இவான் தன் வாழ்நாளில் எந்தவொரு தருணத்திலும் மறக்கவே முடியாததாக இருந்த கறுப்பு நாள்களுக்கு தன்னையே தயார் செய்துகொண்டான்.

எலீனா அடக்குமுறைவாதியாக இருந்தாலும் இவானுடைய விடயத்தில் தெளிவாகவே இருந்திருக்கிறார். சொல்லப்போனால் தன்னுடைய முடிவை அவர் கணித்திருந்திருக்கிறார். அதனாலேயே இவானை ஒரு அரசராக்க தனி ஒரு குழுவை முன்கூட்டியே அமைத்தார். எலினாவால் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்த அமைப்பு இவான் அரசராகும் வரையிலும் நிர்வாகத்தைக் கவனித்துக்கொண்டது. அதே நேரத்தில் இவான் அரண்மனைக்குள்ளேயே சிறை வைக்கப்பட்டான். ரஷ்யாவின் குளிர் காலங்களை தனது மூடிய அறைக்குள் கழித்தான் இவான்.

தன்னை யாராவது கொன்றுவிடுவார்கள் என்ற பயம் இவானுக்குள் மெல்ல முளைத்தது. தனக்கு அளிக்கப்படும் ஒரு வேளை உணவையும் சந்தேகக் கண் கொண்டு பார்க்கத் தொடங்கினான். சொந்த அரண்மனைக்குள் இப்படி இருப்பது இவானுக்கு ஆத்திரமூட்டுவதாக இருந்தது. கிட்டத்தட்ட அதே நேரத்தில்தான் கடவுளின் நெருக்கத்தை உணர்ந்திருக்கிறான் இவான். தன்னுடைய நிலையிலிருந்து மீட்கும்படி இறைவனை நோக்கி பிரார்த்திக்கத் தொடங்குகிறான். எந்தளவிற்கு பிரார்த்தனை வலிமிக்கதாக இருக்குமோ அந்த அளவிற்கு பயனும் இருக்கும் என்பதை ஏதோவொரு புத்தகத்தில் இவான் படித்த அந்த இரவு அவனுக்குள் பல மாற்றங்கள் நிகழ்ந்தன. இவானின் நடவடிக்கைகளும் மாறத் தொடங்கின. ஆசையாக வளர்த்த நாய் மற்றும் பூனையை அரண்மனை மேல்தளத்திலிருந்து கீழ்நோக்கி எறிவது இவானுக்கு பிடித்த பொழுதுபோக்காக மாறியது இந்தக் காலகட்டத்தில் தான்.

அடுத்தநாளும் வழமையாக பிரார்த்தனை செய்தான் இவான். ஆனால் இப்போது கொஞ்சம் வித்தியாசமாக தரையில் மண்டியிட்டு, தலையை தரையில் வேகமாக முட்டிக்கொண்டே பிரார்த்தனை செய்யத் தொடங்கினான். சில நேரங்களில் தலையிலிருந்து ரத்தம் வழியும். ஆனாலும் பிரார்த்தனை ஓயாது. அப்படி என்ன பிரார்த்தனை? தன்னை மன்னராக்கவேண்டும் என்பதுதான். இப்படித்தான் தன்னை வணங்கவேண்டும் என கிறிஸ்து எப்போது சொன்னார் எனத் தெரியவில்லை. ஆனால் அவருடைய கோரிக்கைகளுக்கு கூடிய விரைவிலேயே செவிசாய்த்தார் அவர்.

அன்று கிறிஸ்துமஸ் கொண்டாட்டங்கள் மொஸ்கோவை வண்ணமயமாக்கிக் கொண்டிருந்தன. தேர்ந்தெடுக்கப்பட்ட சபை உறுப்பினர்கள் அனைவரும் இவானை விருந்துக்கு அழைத்தனர். அரச பொறுப்பை ஏற்றுக்கொள்ளும் வயது இவானுக்கு வந்துவிட்டதாக அறிவித்தார் தலைமை மந்திரி. கிரீடம் இவானுடைய தலையில் வந்தமர்ந்தது. அப்போது இவானுக்கு வயது பதினாறு. இராணுவ அதிகாரிகளுக்கு புது அரசரை அறிமுகப்படுத்தி வைத்தனர் சபையினர்.

இராணுவத் தளபதிக்கு முதல் கட்டளையை அறிவித்தார் இவான். தேர்ந்தெடுக்கப்பட்ட சபையின் உறுப்பினர்கள் அனைவரையும் கொன்றுவிடும் படி சொல்லியிருந்தார் அரசர் இவான். மின்னல் வேகத்தில் கட்டளை நிறைவேற்றப்பட்டது. ஒரே இரவிற்குள் தன் னைத் தண்டித்த அனைவரது தலைகளையும் வேட்டை நாய்களுக்கு உணவாக அளித்த பின்னரே உறங்கச் சென்றார்.

கிட்டத்தட்ட எட்டு ஆண்டுகளாக அரண்மனைக்குள்ளேயே முடங்கிக்கிடந்த இவானுக்கு சிறகு முளைத்தது போலிருந்தது. அவசர அவசரமாக தேவாலயத்திற்குள் நுழைந்தார். தன்னுடைய பாணியில் நன்றி தெரிவித்தார். ரஷ்ய மக்கள் புது மன்னரை எவ்வித எதிர்ப்புமின்றி ஏற்றுக்கொண்டனர்.

இவானுக்கு இருந்ததாக சொல்லப்படும் பாரனோயா என்னும் மனநோய் உச்சத்தை அடைந்தது மனைவி அனஸ்தீஷியாவின் மரணத்தின்போது தான். குழந்தைப் பருவத்திலேயே கொடும் தனிமையை சந்தித்த இவான் சிறிதுகாலம் மகிழ்ச்சியாக இருந்தது அவரது மனைவியினால் மட்டுமே. தொடர் நோய்கள் அனஸ்தீஷியாவை வாட்டின. இரவெல்லாம் வலியினால் முனகும் மனைவியின் குரல் இவானை வேதனைப்படுத்தியது. ஆனால் காலம் அனஸ்தீஷியாவிற்கு கருணை காட்டவில்லை. அடுத்த சில வாரங்களில் அவள் மரணமடைந்தாள்.

கடவுளின் இச்செயல் குறித்து சிந்திக்கத் தொடங்கிய இவான் கடைசியாக வந்தடைந்தது கடவுள் இரக்கமற்றவர் என்னும் நிலையைத்தான். அடுத்தடுத்து ஏழு திருமணங்களை செய்துகொண்டார் இவான். ஆனால் எதுவுமே நிலைக்கவில்லை. அனஸ்தீஷியாவைத் தவிர யாரையுமே அவரால் நேசிக்க முடியவில்லை. இது அவருக்கு புரிவதற்குள் அனைத்து மனைவியரையும் கொலைசெய்திருந்தார் இவான். அவருடைய மன நோயினைத் தீவிர மோசமாக்கியது அவரது இல்லற வாழ்க்கைதான்.

இவான் பழங்கால அரசர்கள் மற்றும் விவிலியத்தில் குறிப்பிடப்படும் தண்டனைகள் குறித்து படிப்பதில் ஆர்வம் மிக்கதாய் இருந்தார். தனக்குள் இருந்த அரக்கன் வளர்வதை அறியாமலேயே அடுத்த முடிவை எடுத்தார் இவான். தாமே நேரிடியாக ஒரு காவலாளிகள் கூட்டத்தை உருவாக்கினார். இவர்களுக்கு 'ஒப்பெர்ச்சினிக்கி' எனப்பெயரிட்டார் இவான். கறுப்பு குதிரைகள் மற்றும் கறுப்பு நிற அங்கிகள் அணிந்த இவர்கள் கொஞ்சமும் ஈவு இரக்கமற்றவர்கள். அப்படியான ஆள்களைத்தான் இவானும் தேடித் தேடிக்கண்டுபிடித்தார். இவர்கள் அனைவருக்கும் இவானே தலைவராக இருந்தார்.

அதிகாலை மூன்று மணிக்கு இந்த வீரர்கள் தேவாலயத்தில் கூடுவார்கள். காலை உணவு வரை இப்பிரார்த்தனை தொடரும். அதன்பின்னர் குதிரைகள் ஒவ்வொன்றாகக் கிளம்பும். நாடு முழுவதும் இவர்கள் பயணித்தபடியே இருப்பார்கள். குற்றவாளிகளைக் கண்டுபிடித்து இவானின் முன்னால் கொண்டு போய் நிறுத்தவேண்டும். இதுதான் இவர்களது தலையாய கடமை. ஒவ்வொரு மாலையும் இப்படி கைது செய்யப்பட்டு அழைத்துவரும் குற்றவாளிகளை தேவாலயத்தின் கீழே கட்டப்பட்டிருந்த பெரிய அறைக்குள் அடைத்து வைப்பர்.

இவான் வந்தவுடன் தண்டனை அளிக்கும் படலம் ஆரம்பமாகும். விவிலியம் பழைய ஏற்பாட்டிலிருக்கும் பல கொடூர தண்டனைகளை இவான் இங்கே வழங்கியிருக்கிறார். கால் மற்றும் கைகளை வெட்டி ஊனமாக்குவது, கண்களை தோண்டி எடுப்பது என விதவிதமாக தண்டனைகள் கொடுத்து மகிழ்ந்திருக்கிறார் இவான். இத்தண்டனைகளை தன் முன்னாலேயே நிறைவேற்றும்படி உத்தரவிடுவதுதான் இவானின் வழக்கம்.


ஒருபுறம் கிறிஸ்தவ பேராயர்கள் இவானுக்கு எதிராக குரல் எழுப்பி வந்தனர். குறிப்பாக நாவ்கராட் பகுதியில் இருந்த மக்கள் தனக்கு எதிராக கிளர்ச்சியில் ஈடுபடுவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன என நினைத்த இவான் உலக வரலாற்றில் மிக மோசமான படு கொலைக்கு தயாரானார். நாவ்கராட் பகுதியில் இருந்த சுமார் 15,000 மக்களை உடனடியாக கைது செய்தது இவானின் சிறப்புக் காவலாளிகள் படை.

கைது செய்யப்பட்ட கிறிஸ்தவ பெரியோர்களுக்கு உடனடியாக மரணதண்டனை நிறைவேற்றப்பட்டது. அதிகம் சிரமப்பட்டது பொதுமக்கள் தான். ஒவ்வொருநாளும் ஒவ்வொருமாதிரியாக மக்களுக்கு தண்டனைகள் தரப்பட்டன. வால்கா நதியில் குழந்தைகள் மற்றும் பெண்கள் கை,கால்களை கட்டிய நிலையில் வீசப்பட்டனர். இளம்பெண்கள் ரகசிய அறைகளுக்கு அழைத்துச்செல்லப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டனர். கிளர்ச்சியில் ஈடுபட்டதாக சொல்லப்பட்ட அனைத்து மக்களையும் தனியாக அடைத்தனர். அவர்கள் அனைவரும் பிரம்மாண்ட வாணலியில் அடுத்தநாள் இடப்பட்டு பொரிக்கப்பட்டு வேட்டை நாய்களுக்கு உணவாக இடப்பட்டனர். இப்படியாக உலக வரலாற்றில் மறக்க முடியாத இம்சை அரசனாக இருந்த இவானின் கடைசிக்காலம் கருணையற்றதாக இருந்தது.

இத்தனையும் செய்த இவானின் கடைசிக்காலம் இன்னும் மோசமாக இருந்தது. அதீத குற்ற உணர்ச்சியினால் கடுமையாக பாதிக்கப்பட்டார். தனக்குப்போட்டியாக வந்துவிடுவானோ என்ற பயத்தில் சொந்த மகனையே குத்திச் சாய்த்தார். தன்னால் கொல்லப்பட்டவர்களின் பெயர்களை உச்சரித்தபடியே இருந்தார். எப்படி இவானின் வாழ்வு தனிமையில் துவங்கியதோ அதேபோல தனிமையிலே முடிந்தும் போனது.

1984 ஆம் ஆண்டு மனசிதைவு அவரைக் கொன்றது. அன்பு என்ற ஒன்று மட்டும் இவானுக்கு கிடைத்திருந்தால் வரலாறு வேறுவிதமாய் அவனை சித்தரித்திருக்கும் என்கிறார்கள் வரலாற்று ஆராய்ச்சியாளர்கள்.

# மகாகவி பாரதிக்கு ஒரு மடல்



மகாகவி பாரதி அவர்களே. வணக்கம்.

நீங்கள் எமக்கெல்லாம் ஆதர்சமான சிந்தனையாளன், கவிஞன், படைப்பாளி, பத்திரிகையாளன். நான் உங்களை எனது பால்ய காலம் முதல் படிக்கின்றேன். இன்னும் முற்றுப்பெறவில்லை. உங்களைப் பற்றி பேசுகிறேன். எழுதுகிறேன். எனது தாய்நாட்டில் உங்களுக்காக எங்கள் முற்போக்கு எழுத்தாளர் சங்கம் நடத்திய நூற்றாண்டு விழாக்களில் பங்கேற்றேன். தென்னிலங்கை, வடக்கு, கிழக்கு, மலையகம் எங்கும் விழாவும் ஆய்வரங்கும் நடத்தினோம். உங்களை உங்கள் எழுத்துக்கள் ஊடாக மாத்திரம் தெரிந்து கொண்டமையுடன் ஏனைய பாரதி இயல் ஆய்வாளர்களின் பதிவுகளின் மூலமாகவும் அறிந்துகொண்டேன்.

இலங்கையில் நீங்கள் ஏற்படுத்திய தாக்கம் பற்றி ஒரு விரிவான தொடரை எழுதினேன்.

உங்களது சுயசரிதையில், உங்களது ஞானகுருவாக நீங்கள் வர்ணித்து போற்றியிருக்கும் 'யாழ்ப்பாணத்து ஈசன்' என்று வர்ணித்திருக்கும் ஞானகுரு யாழ்ப்பாணத்துச்சாமி அருளம்பலம் அவர்களின் சமாதிக் கோயிலையும் வடமராட்சியில் தரிசித்திருக்கின்றேன்.

அதே யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்து கொண்டி



ருக்கும் காலைக்கதிர் நாளேட்டின் வாரப்பதிப்பில் தான் அந்தத் தொடரை நாற்பது வாரங்கள் எழுதினேன். பின்னர் அது நூலாக வெளிவந்தபோது, தலைநகரில் அதனை வெளியிட்டு வைத்தேன்.

நீங்கள் பிறந்த நூற்றாண்டுகாலம் 1982 இல் வந்தபோது, நான் கண்ட பாரதி என்ற தொடரை இலங்கை பத்திரிகை சிந்தாமணியில் எழுதிய அதன் ஆசிரியர் எஸ். டி. சிவநாயகம் ஐயாவின் ஊடகப் பாசறையில் வளர்ந்த வித்தியாதரன் பிரதம ஆசிரியராக பணியாற்றும் யாழ். காலைக்கதிரில்தான் எனது அந்தத் தொடர் வெளிவந்தது.

பின்னர் அது தனி நூலாக வெளிவந்தபோதும் வித்தியாதரன் வருகைதந்து வெளியிட்டு வைத்தார். கடந்த 2019 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 05 ஆம் திகதி இந்நிகழ்வு கொழும்பு தமிழ்ச்சங்கத்தில் நடந்தது.

அங்கிருக்கும் உங்கள் சிலைக்கு மாலையும் பொன்னாடையும் அணிவித்து நிகழ்ச்சியை தொடக்கினோம்.

நீங்கள் பிறந்த நூற்றாண்டை கொண்டாடியது போன்று இறந்த நூற்றாண்டையும் உலகெங்கும் கொண்டாடுகின்றவேளையில் இந்த மடலை உங்களுக்கு எழுதுகின்றேன்.

எனது மனதை நீண்டகாலமாக நெருடிக்கொண்டிருக்கும் விடயங்களை உங்களிடம் வருவதற்கு முன்னர் கொட்டிவிடவேண்டும் என்பதற்காகவும் எழுதுகின்றேன்.

ஏனென்றால் நீங்கள் விளக்கம் தருவதற்கும் தயாராக இருக்கவேண்டும் அல்லவா.. ?

பெண்அடிமைத்தனத்திற்கு எதிராக குரல் கொடுத்தவர் நீங்கள். ஆனால், உங்கள் மறைவுக்குப்பின்னர், உங்கள் அருமை மனைவி செல்லம்மாவை, நீங்கள் காதலுணர்வுடன் கைகோர்த்து எட்டயபுர வீதிகளில் அழைத்துச்சென்ற உங்கள் செல்லம்மாவின் தலையை மழித்து மொட்டை அடித்து மூலையில் அமர்த்திவிட்டார்களாம் உங்களது குலத்தில் வந்த சநாதானிகள்.

உங்களுக்காக உங்கள் ஊர் எட்டயபுரத்தில் மணிமண்டபம் அமைத்து அதன் திறப்புவிழாவுக்கு வந்த உங்கள் மனைவியை யார் என்று தெரியாமல் பாதுகாவல் கடமையிலிருந்தவர்கள், தூரப்போ.. என்று கலைத்தார்களாம்.

அட நாந்தானப்பா அந்த பாரதியின் மனைவி செல்லம்மா எனச் சொன்ன பிறகுதான் மேடைக்கருகே செல்ல அனுமதித்தார்களாம்.

இதனையெல்லாம் உங்கள் ஆன்மா கேட்டு, உங்கள் நெஞ்சுபொறுத்துக்கொண்டதா?

எங்கள் தாயகம் இலங்கையை நீங்கள் சிங்களத் தீவு என்று பாடிவிட்டதனால் இங்கு தமிழ்தேசியவாதிகளுக்கு உங்கள் மீது சற்று அல்ல அதிகம் கோபம்.


ஒரு கவிதையில் ஈனப்பறையர்கள் என்றபோதும் என்று எழுதிவிட்டீர்கள். பறையர்கள் என்பதுடன் நீங்கள் நிறுத்தியிருக்கலாமாம். அது என்ன ஈனம்? நாங்கள் ஈனப்பிறவிகளா? எனக்கேட்கிறார்கள். அதனால் தலித் மக்களுக்கும் சற்று கடுப்பு.

உங்களை மறுவாசிப்புக்குட்படுத்தவேண்டும் என்கின்றனர். அது சாத்தியமா? நீங்கள் பெருங்கடல். அங்கே முத்துக்குளிக்கலாம். பவளப்பாறைகளை அகழ்ந்து வரலாம். பெரும்பாலான பேராசிரியர்கள், ஆய்வாளர்கள் உங்களினால் வாழ்கிறார்கள். அவர்களுக்கு நீங்கள் வருமானம் தேடித்தந்த பரோபகாரிதான்.

ஷேக்ஸ்பியரினால் இன்றும் பலர் வாழ்ந்து கொண்டிருப்பதுபோன்று உங்களாலும் பலர் வாழ்கிறார்கள்.

உங்கள் கவிதைகளை படிப்பதுடன் மட்டும் நின்றுவிடாமல் நீங்கள் பிறந்த ஊரையும் பார்ப்பதற்கு உங்கள் பிறந்த நூற்றாண்டு முடிந்து மறு ஆண்டு சென்றேன். அதாவது 1984 இல் உங்கள் கால்கள் நடமாடிய அந்த எட்டயபுரத்துக்குத்தான்.

நீங்கள் பாரதி பட்டம் பெற்ற அரண்மனையை தரிசித்தேன். அங்கு பராமரிப்பு குறைவு. அங்கு கிடைத்த வேலையையும் உதறிவிட்டு தேசாந்தரியாக அலைந்தவர் அல்லவா நீங்கள்?




உங்கள் அப்பாவின் தொழிற்சாலை பாழடைந்துவிட்டது. நீங்கள் அமர்ந்து கவிபாடிய அந்தத்தெப்பக் குளம் அப்படியே இருக்கிறது.

நீங்கள் பிறந்த வீடு நினைவில்லமாகியிருக்கிறது. உங்களுக்காக நிர்மாணிக்கப்பட்ட மணிமண்டபமும் பார்த்தேன். அந்தக் கட்டடம் அமைக்கப்பட்டபொழுது, கல்லும் மண்ணும் சுமந்த கிருஷ்ணமூர்த்தி என்ற ஒரு பாரதி பக்தனை சந்தித்தேன். அவரிடம்தான் அந்த மணிமண்டபத்தின் வாயில் கதவு சாவி இருந்தது. தூரத்தில் வயல்காட்டில் நின்று வெய்யிலில் வெந்து வேலைசெய்து கொண்டிருந்தவர் எமது வருகை அறிந்து ஓடிவந்து திறந்து, உள்ளே அழைத்துச்சென்று காண்பித்தார்.

அந்த ஏழை மனிதருக்கு அதற்காக எதுவித வேதனமும் இல்லை என்பதையும் அறிந்தேன்.

என்னிடமிருந்த சொற்ப பணத்தை அவரது கைச்செலவிற்கு கொடுத்துவிட்டு விடைபெற்றேன். தற்போது அவர் என்ன செய்கிறார்..? என்பதும் தெரியவில்லை.!

அச்சமயம் இமயமலை சாரலில் ஒரு ஒலிபரப்பு கோபுரம் அமைக்கப்பட்டது. அதன் தொடக்கவிழா வில் உங்களது தீராத விளையாட்டுப்பிள்ளை பாடல் இந்தியாவெங்கும் ஒரே சமயத்தில் ஒலிபரப்பினார்கள்.

உங்கள் மணிமண்டபத்துக்கு கல்லும் மண்ணும் சுமந்து மணிமண்டபத்தை காத்துவரும் பக்தன் ஏழை விவசாயி கிருஷ்ணமூர்த்திக்கு மாதவேதனம் தருவதற்கு வக்கற்ற அரசுக்கு ஒலிபரப்புக் கோபுரமும் உங்கள் பாடலும் மாத்திரம் தேவையாக இருந்திருக்கிறது என்று இலங்கை இதழில் அன்றே பதிவு செய்தேன். இதெல்லாம் பழைய கதை. இன்றைய வாசகர்களுக்கு சொல்ல மறந்த கதை.

சரிபோகட்டும்

நான் தற்போது வாழும் ஆஸ்திரேலியாவிலும் உங்களுக்கு விழா எடுத்தோம். உங்கள் பெயரில் இங்கும் ஒரு பாடசாலை நீண்டகாலமாக இயங்குகிறது. உங்களைப்பற்றி எங்கள் குழந்தைகள் நாவன்மைப் போட்டிகளில் பேசுகிறார்கள். விழாக்களில் உங்கள் பாடல்களை பாடுகிறார்கள். கோயில்களில் திருமண வைபவங்களில் உங்கள் பாடல்கள் நாதஸ்வரத்தில் நிச்சயம் இடம்பெற்று எங்கள் செவிப்புலனை குளிர்விக்கும்.

அரங்கேற்றங்களிலும் உங்கள் பாடலுக்கு முக்கியத்துவம் தரப்படுகிறது. தமிழனும் தமிழும் வாழும் காலம் வரை நீங்கள் நீக்கமற நிறைந்திருப்பீர்கள்.

(13ஆம் பக்கம் பார்க்க)





காலைக்கதிர் Kalaikkathir

# பன்முக நோக்கில் பாரதியாரின் படைப்புகள்!

மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்
மெல்பேண் …… ஆஸ்திரேலியா

“பாரதநாட்டு பழைய நாகரிகமும் மேனாட்டு புதிய நாகரிகமும் இந்தியாவில் சங்கமித்துக் கொண்டிருந்த காலத்தில் பிறந்தவர் தான் பாரதியார். இதனால் மேல்நாட்டு நாகரிகத்தில் காணப் பட்ட நல்ல அம்சங்களை தமிழ் மக்களும் ஏற்பது நல்லது என்னும் கருத்து பாரதியார் உள்ளத்தில் ஏற்படலாயிற்று.”



புதுமைக்கவிஞர், புதுயுகக்கவிஞர், புரட்சிக் கவிஞர் என்றெல்லாம் போற்றப்படும் நிலையில் உயர்ந்து நிற்பவர்தான் பாரதியார். இவர் எட்டயபுரத்தில் பிறந்து எல்லோரையும் பார்க்க வைத்தார். வறுமையில் வாடினாலும் பெருமதியாய்ப் பாடி நின்றார். பொறுக்கும் இடத்தில் பொறுத்தார். பொங்கும் இடங்களில் பொங்கிப் பிரவாகித்தார். தலைகுனிந்து வாழுவதைத் தரக்குறைவாய் நினைத்தார். தலை நிமிர்ந்து வாழ தான் எழுதி நின்றார். காலத்தின் குரலாக அவரின் கருத்துகள் எழுந்தன. வீரமும், மானமும், ரோஷமும், உணர்ச்சியும், அவரின் சொத்துக்களாய் அமைந்தன. சிறுமை கண்டு சீறினார். வறுமை கண்டு பொங்கினார். அடிமையென்னும் சொல்லை வாழ்வில் அகற்றிவிட எண்ணினார். சுதந்திரமாய் மூச்சுவிடத் துணிந்து பல கூறினார். பக்தியைப் பேசினார். பண்பினைப் பேசினார். புத்தியைத் தீட்டிடப் புகட்டினார் பலவற்றை. வையத்துள் வாழ்வாங்கு வாழுவதை விரும்பினார். தெய்வத்தை நம்பினார். நல்ல நம்பிக்கைகளுக்கு வரவேற்பளித்த பாரதி மூட நம்பிக்கைகளுக்கு சாவுமணியடிக்கவும் தவறவில்லை. திருந்திய வாழ்வும் சிறப்பான சமூகமும் அமைய வேண்டும் என்னும் பேரவா பாரதியின் உள்ளத்தில் உறைந்த காரணத்தால் அதை நோக்கிய அவரின் செயற்பாடுகளும் அவரின் சிந்தனையால் வந்த பல படைப்புகளும் அமைந்தன என்பது மனங்கொள்ளத் தக்கதாகும்.

எந்த நாடென்றாலும் எந்த மொழியென்றாலும் காலத்தின் போக்குக்கு இணங்கவே இலக்கியம் அமைகிறது எனலாம். 19 ஆம் நூற்றாண்டில் காணப்பட்ட இலக்கியத்துக்கும் 20 ஆம் நூற்றாண்டில் காணப்பட்ட இலக்கியத்துக்கும் பல நிலைகளில் வேறுபாடுகளைக் கண்டுகொள்ள முடிகிறது எனலாம். முந்தைய நூற்றாண்டு இலக்கியம் வறட்சியைக் காட்ட பின்னர் வந்த நூற்றாண்டு இலக்கியப் போக்கு வளமுள்ளதாக அமைந்ததற்கு காலமே காரணமெனலாம். இலக்கியம் என்பது காலத்தின் கருத்தாகாவே மலர்கிறது என்பது கருத்திருத்த வேண்டிய முக்கிய அம்சம் ஆகும்.

அரசர்களும், பிரபுக்களும் பெற்றிருந்த செல்வாக்கை பொதுமக்கள் பெறும் நிலை இந்த நூற்றாண்டில் ஏற்பட்ட காரணத்தால் இலக்கியமும் அதன் படைப்புகளும் பொதுமக்களை மையப்படுத்தியே அமைவதைக் கண்டு கொள்ளுகிறோம். பொதுமக்களின் வாழ்க்கை, குறிக்கோள், இன்ப துன்பங்கள், அவர்களது முன்னேற்றத்துக்கு குறுக்காக நிற்கும் சாதிக் கொடுமை, சமுதாயக் கட்டுப்பாடு என்பவற்றை வெளிப்படுத்துவதாகவே அமைந்திருப்பதை அவதானிக்க முடிகிறது. இவ்வாறு புதுப்பாதையில் பயணிக்கும் இலக்கியம் பழைய இலக்கிய மரபுகளைவிட்டு விடுதலை பெறவேண்டியதாயிற்று. அந்த விடுதலையை இக்கால இலக்கியத்துக்கு அளித்தவராக பாரதியார் விளங்குகிறார் எனலாம். பழைய இலக்கிய மரபுகளை விடுதலை அடையச் செய்த பாரதி பழமையின் சிறப்பினை விட்டுக் கொடுத்தாரில்லை என்பது முக்கியமாகும். பழைமையின் சிறப்பினை பாரதியார் எடுத்துப் பாடிய அளவு வேறு எந்தத் தமிழ்ப்புலவரும் - இந்தியரின் பழைமைச் சிறப்பை எடுத்துப்பாடவில்லை என்பது மனமிருத்த வேண்டிய கருத்தெனலாம்.

பாரதநாட்டு பழைய நாகரிகமும் மேனாட்டு புதிய நாகரிகமும் இந்தியாவில் சங்கமித்துக் கொண்டிருந்த காலத்தில் பிறந்தவர்தான் பாரதியார். இதனால் மேல்நாட்டு நாகரிகத்தில் காணப்பட்ட நல்ல அம்சங்களை தமிழ் மக்களும் ஏற்பது நல்லது என்னும் கருத்து பாரதியார் உள்ளத்தில் ஏற்படலாயிற்று. அதேவேளை மொழி, தமிழ் இனம், பாரதநாடு, பெண்ணுரிமை, சாதிபற்றிய ஏற்றத்தாழ்வு, முரண்பாடுகள், வறுமையின் நிலை, இவை பற்றிய கருத்துக்கள் அவரின் உள்ளத்தில் உரம்பெற்றும் இருந்தன. இந்த நிலையில் பாரதியாரிடம் இருந்து வெளிவந்த படைப்புகளும் பன்முக நோக்குடையனவாகவே அமைந்திருந்தன என்பதும் நோக்கத்தக்கதே.

பாரதியார் ஒருபக்கம் பார்த்தவர் அல்லர். அவரின் நோக்குப் பரந்து விரிந்தது. அவரின் படைப்புகளும் பலதிறப்பட்டன. தெய்வத்தைப் பாடுவார். தேசத்தைப் பாடுவார். சாதியைப் பாடுவார். சன்மார்க்கத்தைப் பாடுவார். பெண்மையைப் பாடுவார். மனிதர்க்குத் தேவையான உண்மையைப் பாடுவார். முடைநாற்றம் வீசுகின்ற மூடத்தனத்தைப் பாடுவார். பாப்பாவுக்கும் பாடினார். படித்தவர்க்கும் பாடினார். பாமரர்க்கும் பாடினார். கவிபாடி ஓயாத பாரதியார் கதைகளும் எழுதினார். கட்டுரைகளும் எழுதினார். புதுக்கவிதை என்னும் வழியிலும் பயணம் செய்தார். அத்தோடு நிற்காமல் பத்திரிகைத் துறையிலும் முத்திரை பதித்தார். இப்படிப் பார்க்கையில் பாரதியையும் அவரின் படைப்புக்களையும் பன்முக நோக்கில்த்தான் பார்க்க வேண்டிய தேவை இருக்கிறது எனலாம்.

தேசியக் கீதங்கள், பக்திப் பாடல்கள், ஞானப்பாடல்கள், பல்வகைப் பாடல்கள், தனிப் பாடல்கள், சுயசரிதை, கண்ணன் பாட்டு, பாஞ்சாலிசபதம், குயில்ப் பாட்டு, வசன கவிதை, புதிய பாடல்கள், யாவும் பாரதியார் எமக்களித்த சொத்துக்கள் எனலாம். இவை ஒவ்வொன்றுமே பாரதியாரை யாரென்று அடையாளப் படுத்தி நிற்கும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை .

பாரதியார் பழைமையைப் போற்றினார். முன்னோர்களை மதித்தார். கம்பனை, வள்ளுவனை, இளங்கோவை உயரிடத்தில் வைத்துப் பார்க்கிறார். ‘வள்ளுவன் தன்னை உலகினிக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு’ என்று நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம் தந்த இளங்கோவைப் போற்றுகிறார். கம்பனைப் போற்றுகிறார். ஆனால் அவர்கள் போல் பாடாமல், அவர்கள் போல் நில்லாமல், அதேவேளை அவர்களை மனமிருத்தி, அவர்களை வழிகாட்டி என எண்ணி, தன்னிலையை வகுத்துக்கொண்டு காலத்துக்கு ஏற்ப தனது படைப்புக்களை அளித்திருப்பதால் பாரதியார் பெரும்புலவராய் மதிக்கப்படுகிறார். பாடுவதில் புதுமை. கையாளும் சொற்களில் புதுமை. எடுத்தாளும் உவமைகளில் புதுமை. சொல்லும் பாவடிவங்களில் புதுமை. இவை பாரதியின் படைப்புகளின் சிறப்புகள் எனலாம்.

பாரதியின் படைப்புகள் பலதிறப்பட்டனவாக இருக்கின்றன. அவை ஒவ்வொன்றுமே ஒவ்வொருவகையில் சிறப்பினை உள்ளடக்கி காட்டுகின்றன. ஒவ்வொரு படைப்பினையும் பன்முக நோக்கில் நோக்கினால் இக்கட்டுரை பெருநூலாகி விடும் என்பதனால் எடுத்துக் கூறக்கூடிய விடயங்களை மட்டும் பார்ப்பது பொருத்தமாக இருக்கும். பாரதியின் படைப்புகளை நோக்குவதற்கு முன்னர் அவருக்கு முன்னிருந்த தமிழ்க் கவிதைகளை படைப்புக்களை நோக்குதல் வேண்டும். பாரதியின் படைப்புக்களை நோக்கும்வேளை பாரதிக்கு முன், பாரதிக்குப் பின் என்று வகுத்தல் சிறப்பாகும். பாரதிக்கு முன் ஆசிரியப்பாக்கள், வெண்பாக்கள் செல்வாக்குற்று இருந்தன. பின் விருத்தம் வந்து நின்றது. இவை பாரதியின் முன் இருந்த நிலை. பாரதி காலத்தில் கண்ணிவகைகள் கரைபுரண்டோடிய காலம் எனலாம். சிந்தும் பாரதியின் சொந்தமாகிக் கிடந்தது. பாரதியின் பின் பல கவிஞர்கள் பாரதியைப் பின்பற்றி பாரதிவழி சென்றார்கள். பாரதி தொடக்கிய புதுக்கவிதை, வசன கவிதை, இன்று பலராலும் பின்பற்றப்படுகிறது என்பதும் பாரதியின் படைப்புத் திறனின் விளைவு.

பாரதியாரின் ஆளுமையால் பல படைப்புகள் வெளிவந்தாலும் பாஞ்சாலி சபதம், கண்ணன் பாட்டு, குயில்ப்பாட்டு, பாரதி அறுபத்தாறு, விநாயகர் நான்மணிமாலை,வேதாந்தப் பாடல்கள், தோத்திரப்பாடல்கள், ஆத்திசூடி, முரசு, பாப்பாப்பாட்டு, சமூகம், வசன கவிதை யாவராலும் குறிப்பிட்டுச் சொல்லும் வகையில் அமைந்த படைப்புகளாகி நிற்கின்றன. இப்படைப்புகள் வழியே இதுவரை தமிழில் இல்லாத வடிவிலும் பொருளிலும் பல புதிய இலக்கிய வகைகளைப் பாரதி பெற்றெடுத்து வழங்குகிறார். பாஞ்சாலி சபதத்தில் பாரதியாரின் ஏக்கம், கோபம், ஆக்ரோஷம், கேலி, கிண்டல், அறிவுரை, ஆவேசம் அனைத்தையும் காணுகிறோம். ‘என்று தணியும் எங்கள் சுதந்திர தாகம் - என்றெம தன்னைகை விலங்குகள் போகும்’ என்று ஏங்கிய ஏக்கம் தீர அடிமைத் தளையிலே வீழ்ந்து கிடக்கின்ற பாரதத்தாயினை விடுவிக்க மக்களிடம் எழுச்சியை ஏற்படுத்தவேண்டும் என்ற ஏக்கமே பாஞ்சாலி சபதமாய் பாரதியாரால் படைக்கப்பட்டது. பாரதியின் உணர்ச்சியின் வடிவமாய் அமைந்த படைப்பே பாஞ்சாலி சபதமாகும்.

‘எளிய பதங்கள், எளிய நடை, எளிதில் அறிந்து கொள்ளக் கூடிய சந்தம், பொதுசனங்கள் விரும்பக் கூடிய மெட்டு இவற்றினை உடைய காவியம் ஒன்று தற்காலத்தில் செய்து தருபவர் நம் தாய்மொழிக்குப் புதிய உயிர் தருபவர் ஆகின்றார். ஓரிரண்டு வருடம் நூல் பழக்கம் உடைய தமிழ் மக்கள் எல்லோருக்கும் நன்கு பொருள் விளங்கும்படி எழுதுவதுடன் காப்பியத்துக்குள்ள நயங்கள் குறைவு படாமல் எழுதுதல் வேண்டும். தமிழ்ச் சாதிக்குப் புதிய வாழ்வு தரவேண்டும் என்று கங்கணம் கட்டி நிற்கும் பராசக்தியே இத் தொழிலில் என்னைத் தூண்டினாள்’ என்று பாரதியாரே கூறுவதிலிருந்து அவரின் பாஞ்சாலி சபதம் என்னும் படைப்பின் உன்னதம் புலப்பட்டு நிற்கிறதல்லவா?

தமிழரின் அரசியல் - பொருளியல் - நோக்கிலும் இந்த நூற்றாண்டின் வரலாற்று நோக்கிலும் சிறப்பான இடம்பெறும் கவிதைகள் பாரதியின் தேசிய கீதத்தினுள்ளும் சுயசரிதையுள்ளும் இடம்பெறுவது குறிப்பிடத்தக்கதாகும். கவிதாதேவி அருள் வேண்டல், காலனுக்குரைத்தல், காதற்பாட்டுக்கள். அந்திப் பொழுது, வேய்ங்குழல், வள்ளிப்பாட்டு, அம்மாக் கண்ணு பாட்டு, வண்டிக்காரன் பாட்டு என்று பல படைப்புகள் பல்சுவை தரும் வகையில் பாரதியின் சிந்தனையாக வந்தமைகின்றன.

பாரதியின் படைப்புகளை நோக்கும்பொழுது புரட்சி வழிப் பொதுமையை வரவேற்றமையும், வடிவத்தில் புதுக்கவிதை என்னும் இலக்கிய வகைக்கு வித்திட்டமையையும் காணமுடிகிறது. பாரதியார் படைப்புகளில் சமதர்மவாதக் கருத்துகளும் கம்யூனிஸ வாதிகளும் வரவேற்கப்படும் அதே வேளை கடவுள் பற்றியும் பாடுகிறார். தெய்வத்தை முழுசாகவே நம்புகின்றார். இவை இரண்டும் முரண்பட்டு இருந்தாலும் இப்படிப் பாரதியாரின் படைப்புகள் பல நோக்கில் அமைந்தமைக்கு அக்கால சூழலும் அக்கால அரசியல் தலைவர்களுமே பாரதியாரின் இந்த முரண்பாட்டுக்குக் காரணம் எனலாம். விடுதலை இயக்கத்துக்குத் தலைமை தாங்கியவர்கள் தெய்வபக்தியில் திளைத்தவர்களாக விளங்கியதால் பாரதியாரின் சிந்தனையின் அவரின் நோக்காய் படைப்புகள் மூலமாய் வெளிப்பட்டது எனலாம்.

பாரதியால் படைக்கப்பட்ட உரைநடைப் படைப்புகளை நோக்கும் பொழுது தருக்க முறை, திறனாய்வு முறை, வருணனை முறை, விளக்கமுறை,எடுத்துரை முறை, சொற்பொழுவு முறை, தத்துவ முறை, எள்ளல் முறை என்னும் பன்னோக்கினைக் கண்டு தெளியலாம். பாரதி என்னும் கவிஞன் முரண்பாடுகள் உள்ளவனாய்ப் படைப்புகள் மூலம் பார்க்க முடிகிறது. ஆங்கிலக் கல்வியை வெறுக்கிறான். ஆங்கில ஆதிக்கத்தை எதிர்க்கிறான். ஆனால் ஆங்கிலக்கவி ஷெல்லியை மனமிருத்தி ‘ஷெல்லிதாசன்’ என்னும் புனை பெயரில் பாப்புனைகிறான்.

(13ஆம் பக்கம் பார்க்க)

- துணவியூர் கேசவன் -

# பத்திரிகைப் பணியில் பாரதி!



மகாகவி பாரதியார் அமரத்துவமடைந்த நூற்றாண்டு தினம் இன்றாகும்.

மகாகவி சுப்பிரமணிய பாரதியாரை அறியாதோர் தமிழுலகில் இருக்கமாட்டார்கள். ஆனால் பாரதியென்றவுடனே எம்மனைவர் முன்பும் மகா கவிஞனாக, புரட்சியாளனாகவே அவர் தோற்றம் தருகிறார். கவிஞன் என்ற பாரதியின் ஆளுமை அவரது ஏனைய ஆளுமைகளைப் பின்தள்ளி அல்லது தன்னுள் மறைத்து மேற்கிளம்பியது என்பதே உண்மையாகும். கவிஞன் என்ற பரிமாணத்தைத் தாண்டி பல்பரிமாணமுடையவர் பாரதியார். அத்தகையதொன்றே பத்திரிகையாளன் என்கிற அவரது பரிமாணம்.

பாரதி ஒரு பத்திகையாளரா என்ற வினா எம்மில் பலருள் எழலாம். அவரது வாழ்க்கையின் பெரும்பகுதியை அவர் பத்திரிகையாளராகவே கழித்தார் என்பதும் வெறுமனே ஜீவனோபாயத்திற்கான தொழிலாளியாக அல்லாமல் தாக்க வன்மையுள்ள பங்குதாரராகவே அவர் பணியாற்றினார் என்பதும் எம்மில் பலருக்குத் தெரியாது. பத்திரிகையாளர் எனும் அவரது வகிபாகம் அவரையும் வடிவமைத்தது, தமிழில் பத்திரிகைத் துறையையும் மெருகமைத்தது. அதனாலேயே பாரதியார் பத்திரிகையாளராகவும் முக்கியத்துவம் பெறுகிறார். தமிழ்ப் பத்திரிகை வரலாற்றால் அவரை நிராகரித்து முன்னகர முடியாது.

தமிழில் பத்திரிகைத் துறையின் ஆரம்பக்காலம் அது. தமிழின் முதல் நாளிதழாகக் கொள்ளப்படும் சுதேசமித்திரன் 1882இல் வார இதழாகத் தொடங்கி 1899இல் நாளிதழாக மாறிய பத்திரிகை. தமிழ்ப் பத்திரிகைத் துறையின் தந்தை எனக்கருதப்படும் ஜி. சுப்பிரமணிய ஐயரால் நிறுவப்பட்ட அந்தப் பத்திரிகையில் உதவி ஆசிரியராக 1904 நவம்பரில் இணைந்தார் பாரதியார். அதுவே அவரது பத்திரிகைத் துறைப் பிரவேசம். காசியில் தன் படிப்பை முடித்துக்கொண்டு பாரதியார் எட்டயபுரம் ஜமீனில் இணைந்து சில காலம் பணியாற்றினார். அப்பணி அவருக்கு உவப்பாக இல்லாமையால் விரைவில் அங்கிருந்து வெளியேறினார். பின்னர் மதுரை சேதுபதிப் பள்ளியில் தமிழாசிரியராக, தற்காலிகமாக மூன்று மாதங்கள் பணியாற்றினார். அதனைத் தொடர்ந்தே சென்னைக்கு வந்து சுதேசமித்திரனில் இணைந்தார் பாரதியார். அன்றிலிருந்து மரணிக்கும்வரை ஏதோவொரு வகையில் அவர் பத்திரிகையாளராகவே வாழ்ந்தார்.

சுதேசமித்திரனில் இரண்டு ஆண்டு




கள் உதவி ஆசிரியராகப் பாரதியார் பணியாற்றியுள்ளார். இக்காலப் பகுதியில் பத்திரிகைத் துறையின் நுட்பங்கள் பலவற்றை அவர் கற்றுக்கொண்டார் எனக் கருதலாம். அதேவேளையில் 1905 ஒகஸ்ட் முதல் சக்கரவர்த்தினி என்ற பத்திரிகையில் ஆசிரியராகப் பணியாற்றினார். இது பெண்களுக்காக வெளிவந்த முதல் தமிழ்ப் பத்திரிகை என்பதனைக் கவனிக்க வேண்டும். 1906 மே மாதத்திலிருந்து இந்தியா என்ற அரசியல் பத்திரிகை சென்னையிலிருந்து வாரப் பத்திரிகையாக வெளிவரத்தொடங்கியது. அப்பத்திரிகை பாரதியாரால் தொடங்கப்பட்டதாகக் கூறப்பட்டாலும் அதனை நிறுவமுடியவில்லை. 'பாரதியாருக்காகவே இந்தியா தொடங்கப்பட்டது' என்ற கருத்தும் உண்டு. எவ்வாறாயினும் இந்தியா பத்திரிகையின் ஸ்தாபிதத்தில் பாரதியாரின் பங்கும் இருந்திருக்க வேண்டும் என்பதும் ஆரம்பகாலம் முதலே அவர் இந்தியாவில் மறைமுகமாகப் பணியாற்றியுள்ளார் என்பதும் ஊகிக்கத்தக்கனவே. 1906 ஆகஸ்டில் சுதேசமித்திரன் மற்றும் சக்கரவர்த்தினி ஆகிய பத்திரிகைகளில் இருந்து வெளியேறி இந்தியாவின் ஆசிரியராக இணைந்துகொண்டாலும் பாதுகாப்புக்காகத் தனது பெயரை வெளிப்படுத்தாது பணியாற்றினார். 1908 செப்டெம்பர் வரை சென்னையிலிருந்து வெளிவந்த இந்தியா, 1908 ஒக்ரோபர் முதல் 1910 ஏப்ரல் வரை புதுச்சேரியிலிருந்து வெளிவந்தது. பின்னர் நிரந்தரமாகவே நின்றுவிட்டது. இறுதிவரை பாரதியார் இந்தியாவில் ஆசிரியராகப் பணியாற்றினார்.

பாலபாரதா (Young India) என்ற ஆங்கிலப் பத்திரிகையிலும் விஜயா, கர்மயோகி, தர்மம் முதலிய பத்திரிகைகளிலும் பாரதியார் ஆசிரியராகப் பணியாற்றியுள்ளார். சூரியோதயம் என்ற பத்திரிகையிலும் மறைமுகமாக ஆசிரியராகப் பணியாற்றினார் என ஆய்வாளர்கள் சிலர் குறிப்பிடுகின்றனர். விவேகபாநு, சர்வஜனமித்திரன், ஞானபாநு, கலைமகள், பெண் கல்வி, தேசபக்தன் முதலிய தமிழ்ப் பத்திரிகைகளிலும் தி ஹிண்டு, கொமன்வீல், ஆர்யா, மெட்ராஸ் ஸராண்டட், நியூ இண்டியா முதலிய ஆங்கிலப் பத்திரிகைகளிலும் ஆக்கங்கள் பலவற்றை எழுதியுள்ளார். இவ்வாறாக பல பகுதிகளில் இருந்து வெளிவந்த தமிழ், ஆங்கிலப் பத்திரிகைகளில் பாரதியாரின் ஆக்கங்கள் வெளிவந்துள்ளன. பிரிட்டிஷாரின் கெடுபிடிகளாலும் சிறைவாசத்தாலும் சில காலம் அவரது பத்திரிகை எழுத்துக்கள் தடைப்பட்டிருந்தாலும் பின்னர் மீண்டும் பத்திரிகை எழுத்துக்களில் கவனஞ்செலுத்தினார். 1915ஆம் ஆண்டு முதல் அரசியல் கலப்பில்லாது எழுதவேண்டும் என்ற கோரிக்கையை மனதிலிருத்தி சுதேசமித்திரனில் எழுதத்தொடங்கினார். எனினும் அவ்வப்போது அவரது எழுத்துக்களில் விடுதலையுணர்வு தலைகாட்டத் தவறவில்லை. 1920ஆம் ஆண்டிலிருந்து அமரத்துவமடையும்வரை சுதேசமித்திரனில் உதவி ஆசிரியராகப் பணியாற்றினார். பாரதி அமரத்துவமடைவதற்கு முதல்நாள் இரவு 'நாளை அமானுல்லாக்களைப் பற்றி எழுதி சுதேசமித்திரன் ஆபீசுக்கு எடுத்துச் செல்லவேண்டும்' எனக் கூறியுள்ளார். இது பாரதி பத்திரிகைப் பணிகளின் நினைவுடனேயே அமரத்துவமானதைக் காட்டுகிறது.

பாரதி என்ற யுகபுருஷனின் எழுச்சிக்குப் பத்திரிகைத்துறையின் பங்களிப்பு முக்கியமானது. பாரதி பத்திரிகையில் பணியாற்றிய காலத்தில் அவரது சிந்தனையும்




சமூகநோக்கும் விரிவுகண்டதுமட்டுமன்றி பலரது தொடர்பும் நட்பும்கூட ஏற்பட்டன. பத்திரிகைப் பணியில் இருந்த போது உலக நாடுகளின் விடுதலைப் போராட்டங்கள் பற்றிய செய்திகளைப் படிக்கவும் மொழிபெயர்க்கவும் எழுதவும் நேர்ந்தது. இவற்றாலும் அவர் பழகியோரின் செல்வாக்கினாலும் பாரதியின் நாட்டுப்பற்றும் விடுதலையுணர்வும் சமூக நோக்கும் உலகப் பார்வையும் விரிவுகண்டன. 'சுதேசமித்திரன் பத்திரிகைக்கு உழைக்க ஆரம்பித்தவுடன் அவரது உள்ளம் மலர்ச்சியடைய ஆரம்பித்தது' என்ற செல்லம்மா பாரதியின் கூற்றும் 'எட்டயபுரத்து மன்னருக்குத் தோழராகவிருந்த பாரதியை மித்திரனுக்கு வந்த உலகச் செய்திகள் விழிதிறக்கச் செய்தன' என்ற முகம்து செரீபு என்பாரின் கூற்றும் 'பாரதிபுரிந்த பத்திரிகைப் பணியே அவரையொரு தேசியக்கவியாக்கியது' என்ற சேதுபாண்டியனின் கூற்றும் மனங்கொள்ளத்தக்கன.

கவிஞன் எனும் பாரதியின் முதன்மைப் பரிமாணத்திலும் நவீன தமிழ்க் கவிதையின் பிதாமகர் என்ற அவரது வகிபங்கிலும்கூட பத்திரிகைத் துறையின் தாக்கத்தினை மறுதலித்துவிடமுடியாது. அவர் பத்திரிகையில் எழுதிய கட்டுரைகள், ஆசிரியவுரைகள், செய்தி அலசல்கள் முதலிய பலவற்றின் கருத்துக்களே பின்னர் கவிதைகளாக உருக்கொண்டன என முனைவர் பா. இறையரசன் குறிப்பிடுகின்றார். 'தமிழ்ப் பாயைின் இனிமை', 'வாராய் சுயாதீன ரவியே' ஆகிய பத்திரிகை எழுத்துக்களே முறையே 'செந்தமிழ் நாடெனும் போதினிலே', பாரத மாதா திருப்பள்ளியெழுச்சி ஆகிய கவிதைகளாகின என அவர் உதாரணங் காட்டுகிறார். பாலபாரதா என்ற ஆங்கிலப் பத்திரிகையில் பாரதி எழுதிய 'வந்தே மாதரம்' என்ற பகுதி இவரது வசன கவிதைகளுக்கு முன்னோடியாயிற்று. எட்டயபுரத்தில்




மரபுசார்ந்த வடிவத்திலும் உள்ளடக்கத்திலும் கவிதைகளைப் பாடிவந்த பாரதியை நவீன கவிதைகளை நோக்கி நகர்த்தியமையில் பத்திரிகைளின் பங்கும் கணிசமானது. பத்திரிகைப் பணியினூடாகப் பாரதிக்குக் கிடைத்த புதிய சிந்தனை, விடுதலையுணர்வு மற்றும் புதிய பார்வைகளுக்கப்பால் கவிதையின்வடிவம், மொழி என்பன தொடர்பாக அவருக்கேற்பட்ட விரிந்த நோக்கும் பாரதி தமிழ்க் கவிதையைப் புதிய நெறியில் அழைத்துச் செல்ல வழிவகுத்தன. பாரதியின் கவிதைகளை மக்கள் மத்தியில் எடுத்துச் சென்று அவற்றை பிரபல்யப்படுத்தியதிலும் பேணியதிலும் பத்திரிகைகள் பெரும் பங்காற்றின என்பதும் கவனிக்கத்தக்கது.

பாரதியாரின் உரைநடை தனித்துவமானது. தமிழ் உரைநடைக்குப் புதிய தெளிவினைத் தந்தவராகப் பாரதியார் கருதப்படுகிறார். 'வேகமும் எளிமையும் நேருக்கு நேரான சம்பாஷணைப் போக்கும் இடையிடையே ஹாஷ்யமும் கலந்து ஒரு புதிய நடையில் பாரதியார் எழுதுகிறார். பேச்சுமொழியை அவர் கையாள்வதில் ஒருபுதியஜீவன் இருக்கிறது' என்றபெ.தூரன் என்பாரின் கருத்து கவனத்திற்குரியது.

(12ஆம் பக்கம் பார்க்க)

காலைக்கதிர் Kalaikkathir

# பத்திரிகைப் பணியில் ......






(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

பாரதியின் உரைநடை அவரது கவிதை நடையிலிருந்து வேறானது. கொச்சை நீக்கிய பேச்சு வழக்கினையும் பிறமொழிச் சொற்களினை குறிப்பாக வடமொழிச் சொற்களினையும் கலந்து எழுதினார். 'கூடியவரை பேசுவது போல எழுதுவதுதான் உத்தமம்' என்ற கருத்தை பாரதியார் வெளிப்படுத்தியிருந்தார். அன்றைய நிலையில் தமிழ்நாட்டுப் பத்திரிகைகளில் ஆங்கில நடையில் தமிழை எழுதும் பழக்கம் இருந்ததாகத் தெரிகிறது. ஆனால் பாரதியார் அதனை விரும்பியிருக்கவில்லை. 'எழுதப்படுகிற விடயத்தை இங்கிலீஷ் தெரியாத ஒரு தமிழனிடம் சொல்லிக்காட்டு. அவனுக்கு நன்றாக அர்த்தம் விளங்குகிறதா என்று பார்த்துக் கொண்டு பிறகு எழுது. அப்போதுதான் நீ எழுதுகிற எழுத்து தமிழ் நாட்டிற்குப் பயன்படும்' என்ற பாரதியின் வழிகாட்டல் அவரது கொள்கையை வெளிப்படுத்துகிறது. ஆங்கிலச் சொற்களைத் தமிழில் பயன்படுத்துவது தொடர்பில் அவருக்கு தெளிவு இருந்தது. தேவைப்பட்டால் பெயர்ச் சொற்களுக்குரிய ஆங்கிலப் பதங்களைப் பயன்படுத்தலாமே தவிர வினைச்சொற்களைப் பயன்படுத்தக் கூடாது என்பது அவரது நிலைப்பாடு. ஆரம்பத்தில் சுதேசமித்திரனில் பணியாற்றியபொழுது உரைநடையை அதாவது பத்திரிகைநடையைப் புரிந்துகொண்டு தனக்கெனவொரு நடையை உருவாக்கமுயன்றுள்ளார் எனலாம். 'இந்தியா'வில் வெளியான பாரதியின் எழுத்துக்கள் அவரது தனித்துவமான நடையை இனங்காட்டின.

'அதற்கு முன்னர் எவரும் அவ்வழியில் பத்திரிகை நடத்தவில்லை என்று சொல்லும்வாறாக வெகு சிறப்புடனும் திறமையுடனும் எழுதிவரத் தொடங்கினார். சிறு சிறு பதங்களுடன் கூடிய ஒரு நவீன கம்பீர நடையுடன் இந்தியா பத்திரிகை வெளிவந்தது' எனும் இராமாநுஜலு நாயுடு என்பாரின் கூற்று மனங்கொள்ளத்தக்கது. இத்தகைய பாரதியாரின் பத்திரிகை நடை பின்னர் சீரானதாகத் தொடர்ந்தது.

பாரதியின் உரைநடை தொடர்பாக சில விமர்சனங்கள் உண்டு. வடமொழிச் சொற்கள் அதிகளவில் விரவிவருவது இடர்தருவதாய் இருப்பதான கருத்து அவற்றுள் முதன்மையானது. ஆனால் பாரதியாரின் காலத்தில் வடமொழிச் சொற்கள் தமிழில் இயல்பாகப் பயன்படுத்தப்பட்டன என்பதனைக் கவனத்தில் கொள்ளல் வேண்டும். அத்தோடு தமிழில் உரைநடை நூல்கள் அதிகளவில் தோன்றாத, தமிழ் உரைநடை அதிகளவில் வளர்ச்சி காணாதவொரு காலகட்டத்தில் பாரதியார் இதழியல் துறையில் நுழைந்தார் என்பதனைக் கவனத்தில் கொள்ள வேண்டும். இவ்வாறான சூழ்நிலையில் தான் 'தனக்கு முற்பட்ட, சமகால இதழியல் நடைகளில் இருந்து எளிய நடையமைப்பைத் தருவித்தவர் பாரதி' என்ற முனைவர் பா. இளவரசனின் கூற்றை விளங்கிக்கொள்ள வேண்டும். புதிய எளிய உரைநடை குறிப்பாக பத்திரிகை நடை பாரதியாரால் உருப்பெற்றது. பல்வேறு துறைசார்ந்த வளர்ச்சியும் தமிழில் ஏற்படவேண்டும் என அவாவிய பாரதி அவ்வாறான நிலைக்கு அவசியமான கலைச்சொற்கள் தமிழில் இல்லாதநிலை கண்டு அவற்றைத் தாமே முயன்று உருவாக்க முனைந்தார். புரட்சி, பொதுவுடைமை முதலிய இன்றும் வழக்கிலுள்ள சில சொற்கள் பாரதியாரால் உருவாக்கப்பட்டன என்பது ஆய்வாளர்களால் சுட்டிக்காட்டப்படுகிறது. தமிழில் உரைநடை வளர்ச்சியில் பாரதியாரின் பங்களிப்பு முக்கியமானது. 'பாரதியாரை ஒரு பெருங்கவிஞராகத்தான் நம்மில் பலருக்குத் தெரியும். தமிழ் உரைநடை வளர்ச்சியில் அவருடைய பங்கு நமக்குச் சரிவரத் தெரியாது' என்ற இரா.தண்டாயுதம் என்பாரின் கூற்றும் 'கவிதையுள்ளம் கொண்ட பாரதி உரைநடையைத் தொட்டதற்குக் காரணம் இதழியலில் அவர் நுழைந்ததேயாகும்' என்ற பா.இறையரசனின் கூற்றும் 'கவிதைகளோடு போட்டியிடும்வகையில் கட்டுரைகளும் தரத்திலும் திறத்திலும் சம அளவில் நிற்பதற்குக் காரணம் அவர்



முதலில் பத்திரிகையாளராக இருந்து தனது தமிழ்த் தொண்டைத் தொடங்கியதுதான்' என்ற ம.பொ.சிவஞானம் அவர்களின் கூற்றும் கவனிக்கப்பட்டால் உரைநடைவளர்ச்சியில் பாரதியின் பங்கினையும் அதற்கு பத்திரிகைத்துறை களமாக அமைந்தமையினையும் உணரமுடியும்.

பத்திரிகைப் பணி பாரதியாரிடம் பலரைக் கொண்டுவந்து சேர்த்ததைப் போலவே பாரதியாரையும் பலரிடம் கொண்டு போய்ச் சேர்த்தது. ஜி.சுப்பிரமணிய ஐயர் முதலிய வழிகாட்டிகளும் திலகர், விபினசந்திரபாலர் போன்ற நண்பர்களும் பாரதியாருக்குப் பத்திரிகையால் கிடைத்தார்கள். இதுவே பாரதியாருள் அக்கினிக்குஞ்சாய்க் கிடந்த தேச பக்தியையும், அரசியல் ஈடுபாட்டையும் கனன்றெழச் செய்தது, தீவிரத்தன்மையுடையவராக பாரதியாரை முகிழ்ந்தெழச் செய்தது. பாரதியாரிடத்தில் ஆன்மீக ஈடுபாடு வளரக் காரணமான அரவிந்தரின் தொடர்பும் இந்தியா என்ற பத்திரிகையூடாக வாய்த்ததாகும். இந்தியா பத்திரிகையைத் தொடங்குவதற்குக் காரணமாயிருந்த மண்டையம் அழகிய சிங்கப்பெருமாள், இந்தியா பத்திரிகையின் உரிமையாளர் மண்டையம் எஸ்.என்.திருமலாச்சாரியார் ஆகியோர் இராகிருஷ்ணர், விவேகானந்தர் ஆகியோர் மீதான ஈடுபாடு பாரதிக்கு ஏற்படக் காரணமானவர்கள்.

பாரதியாரைப் பெரும் புரட்சியாளராக எம்முன் நிறுத்துவனவற்றுள் தேச விடுதலை தொடர்பான நிலைப்பாட்டிற்கு அடுத்ததாக பெண் விடுதலை தொடர்பான அவரது குரலுக்கு முக்கியத்துவம் இருக்கிறது. அவ்வாறன பெண் விடுதலைச் சிந்தனை தீவிரம் பெற சக்கரவர்த்தினி என்ற பெண்களுக்கான பத்திரிகைப் பணி களமாக அமைந்ததற்கு அப்பால் நிவேதிதா தேவியின் அறிமுகமும் காரணமாயிற்று. நிவேதிதா தேவியும் பத்திரிகையினூடாக பாரதியாருக்கு அறிமுகமானவர். இவ்வாறாக பாரதி எனும் பெரும் ஆளுமையின் எழுச்சியில் செல்வாக்குச் செலுத்திய பலரும் பத்திரிகைப் பணியால் பாரதிக்குக் கிடைத்தவர்கள். அத்தோடு பத்திரிகை மூலம் பாரதியோடு தொடர்புபட்டபலர் பாரதியின் தனிப்பட்ட வாழ்க்கைக்குப் பலவழிகளிலும் உதவி பாரதியைப் பேணியுள்ளார்கள்.

பத்திரிகை தமிழில் வளர்ச்சி காணத் தொடங்கியிருந்த ஆரம்ப காலகட்டத்திலேயே பாரதியார் பத்திரிகையில் பணியாற்றியிருந்தார். அக்காலகட்டத்தில் பல்வேறு நிலைகளில் தமிழ்ப் பத்திரிகைத் துறை மாறுதல்களையும் வளர்ச்சியையும் அவாவிநின்றது. அந்நிலையில் தன்னால் இயன்றளவில் புதிய முறைகளையும் நுட்பங்களையும் கையாண்டு பல விடயங்களை பாரதியார் அறிமுகஞ் செய்தார். புதுமைகளைச் செய்தார். தமிழ்ப் பத்திரிகைகளைப் புதிய பாதையில் அழைத்துச் சென்றார். அரசியல் சார்ந்த மற்றும் சாதாரண நடைமுறைச் சம்பவங்கள் சார்ந்த செய்திகளைத் தாண்டி உழவுத் தொழில், அறிவியல், கல்வி, சமயம், பெண்கள் சார்ந்த செய்திகளும் பத்திரிகையில் வெளிவர ஆவன செய்தார். வெளிநாட்டுப் பத்திரிகைகளில் வெளிவந்த புகைப்படங்களை தம் பத்திரிகைகளில் வெளியிட ஆவல் கொண்டு அப்படியே வெளியிடும் வசதி அன்றில்லாமையால் அவற்றைச் சித்திரங்களாக்கி வெளியிட்டார். இன்று கேலிச்சித்திரம் எனப்படுகின்ற கருத்துப்படங்களை தமிழ்ப் பத்திரிகைகளில் முதன் முதலில் வெளியிட்டவர் பாரதியாரே. விகடச் சித்திரம் என அவற்றை பாரதியார் அழைத்தார். பொருத்தமான ஓவியர்களைக் கொண்டு, தனது கருத்துக்களை அவர்களுக்கு விளக்கி, அதற்கேற்ப வரையச் செய்து வெளியிட்டுள்ளார். இந்தியா இதழ்கள் ஒவ்வொன்றிலும் மூன்றுக்குக் குறையாத கருத்துப்படங்கள் வெளிவந்துள்ளன. சித்திராவளி என்ற பெயரில் முழுவதும் கருத்துப்படங்களைக் கொண்ட பத்திரிகையொன்றை வெளியிட பாரதியார் ஏற்பாடுகளைச் செய்திருந்த போதிலும் அது சாத்தியமாகாமல் போயிற்று. நடைச்சித்திரம் (Feature) என்ற தமிழுக்குப் புதிதானதொரு வடிவத்தைப் பயன்படுத்தியும் எழுதியுள்ளார். பத்திரிகை இதழ்களை பகுதிகளாக வடிவமைக்கும் முறையையும் கொண்டு வந்தார். அரசியல், இலக்கியம், சமயம் என்றவாறாக பகுதி




களை வடிவமைத்தார். செய்திகளுக்கு ஆங்கிலத்திலும் தமிழிலும் தலைப்பிடும் முறை அன்றைய பத்திரிகைகளில் காணப்பட்டது. ஆரம்பத்தில் அந்த முறையையே பாரதியார் கையாண்டாலும் பின்னர் அதனை மாற்றி தமிழில் மட்டும் தலைப்பிடும் பழக்கத்தைக் கொண்டு வந்தார். ஆங்கிலத் திகதியுடன் தமிழ் ஆண்டு, மாதம், நாள் என்பவற்றையும் பத்திரிகைகளில் குறிப்பிடத் தொடங்கினார். விஜயா இதழ்களிலும் புதுவையில் வெளிவந்த இந்தியா இதழ்களிலும் பக்க எண்களைத் தமிழ் எண்களில் கொடுத்துள்ளார். இவ்வாறாகப் பத்திரிகைத் துறையின் வளர்ச்சியில் பாரதியாரின் பங்களிப்பு புறந்தள்ள முடியாததாக அமைந்திருந்தது.

பத்திரிகைத்துறையில் நேரடியாதானே ஏற்படுத்திய மாற்றங்களுக்கும் அப்பால் தனது விமர்சனங்களாலும் வழிகாட்டல்களாலும் முன்மாதிரிச் செயற்பாடுகளினாலும் பிறரை ஆகர்ஷித்ததனூடாகவும் பத்திரிகைத்துறையில் மாற்றங்களை ஏற்படுத்தினார். பத்திரிகைகளின் செல்நெறி மற்றும் அவை பயன்படுத்தும் மொழிநடை பற்றி விமர்சித்து 'பத்திரிகைத் தமிழ்', 'பத்திரிகைகளின் நிலமை' முதலிய பாரதியாரின் கட்டுரைகள் பத்திரிகைத்துறையை நெறிப்படுத்தின. பாரதியிடமிருந்து கவிஞர் பரம்பரையொன்று தழைத்ததைப் போலவே பத்திரிகையாளர் பரம்பரையொன்றும் தொடர்ந்தது.




பி.பி.சுப்பையா, ஹரிஹர சர்மா, என்.நாகசாமி, வ.ராமசாமி(வ.ரா) எனப் பலர் பாரதியின் தாக்கத்துக்குட்பட்டு பத்திரிகைப் பணியைத் தொடர்ந்தனர். 'தொடக்கத்திலும் இறுதியிலும் பணியாற்றிய சுதேசமித்திரனில் பாரதி உருவாக்கிய நடைச்சித்திரமும் எளிய தமிழ்நடையும் இந்தியா இதழில் காட்டிய அரசியல் விழிப்புணர்ச்சியும் கடுமையான சாடல்நடையும் தமிழ் நாட்டில் பல இதழ்கள், பல இதழாளர்கள், இதழாசிரியர்கள் உருவாகக் காரணமாகும்' என முனைவர் பா.இளவரசன் குறிப்பிட்டிருப்பது பத்திரிகைத்துறையில் பாரதியின் தாக்கம் எத்தகையது என்பதனை உணர்த்துகிறது. 'செந்தமிழ், தமிழ்ப் பொழில் போன்ற சில புதுமை இதழ்களையும் சில சாதி,மத நிறுவன இதழ்களையும் தவிர இயக்க இலக்கிய முயற்சிகளுக்குக் களனாக விளங்கிய இதழ்கள் யாவற்றுக்கும் பாரதியே ஆதர்சமாக விளங்கினான்' என்ற பேராசிரியர் கா.சிவத்தம்பியின் கருத்தினையும் மனங்கொள்ளல் அவசியம்.

பாரதியார் என்ற மாபெரும் ஆளுமையின் பல்பரிமாணங்களுள் பத்திரிகையாளர் எனும் வகிபாகம் மிகவும் முக்கியத்துவமுடையது. பாரதியாரைச் செதுக்கி முழுமைப்படுத்தியதில் பத்திரிகைத்துறையின் பங்களிப்பு நிராகரிக்க முடியாதது. அது பாரதியாரின் ஏனைய பரிமாணங்களின் எழுச்சிக்கும் விரிவுக்கும் வழிகோலியது என்பது கவனிக்கப்பாலது. அத்தோடு அவரது பத்திரிகைப்பணி சமூகப் பயனுடைய பல விடயங்கள் நிகழ்வதற்குக் காரணமாகியிருக்கிறது. அதேவேளை தமிழில் பத்திரிகைத் துறை வளர்ச்சியில் பாரதியாரின் பங்களிப்பினையும் நிராகரித்துவிட முடியாது. புதுமைகளைப் புகுத்தியும் மாற்றங்களை ஏற்படுத்தியும் நெறிப்படுத்திப் பத்திரிகைத்துறையை வளர்ச்சிப்பாதையில் அழைத்து வந்தவர் பாரதியார். யுகபுருஷரான பாரதியார் வெற்றிகரமான பத்திரிகையாளராகத் திகழ்ந்தார். பாரதியாரை நினைக்கின்ற, போற்றுகின்ற கணந்தோறும் அவருக்கும் பத்திரிகைத் துறைக்கும் இடையிலான தொடர்பும் எம் நினைவிலிருக்கும்.

# தமிழ் ஊடகத்துறையின் ..............................

(06ஆம் பக்கத் தொடர்ச்சி)

மிகப் பிரபலமான எழுத்தாளர் என்று வர்ணிக்கப்படுகின்ற அதாவது 'புளோஸ் ரைட்டா' என்று ஆங்கிலத்திலே மதிக்கப்படுகின்றவர்களுள் ஒருவர்தான் ஆர். எல்.ஸ்டீவன்சன். அவர் இந்த மாதிரியாகத்தான் தன் திறமையை வளர்த்துக் கொண்டேன் என எழுதியிருக்கிறார்.

இதே மாதிரியாக நல்ல எழுத்தாளர்களுடைய எழுத்துக்களை மனதிலே வாங்கித் திருப்பி எழுதிப் பயின்று வந்தால் அந்தக் கலை தானாகவே அவர்களுக்கு வந்துவிடும். மற்றது இன்னுமொன்று என்னவென்றால் தெளிவாக எழுதப்பழக வேண்டும். தெளிவான நடை என்றால் நான் முந்தியே சொன்னேனே மூன்று ஆசிரியர்கள்...

'கல்கி' ஆசிரியர் கிருஷ்ணமூர்த்தி, கவிஞர் கண்ணதாசன், தமிழ்வாணன். இவர்களுடைய தமிழ் நடையிலுள்ள சிறப்பு என்னவென்றால் எளிமையும், சொல்ல வேண்டிய விடயத்தை மிகவும் கச்சிதமாகச் சொல்லக் கூடிய பாணியும்தான்.

ஒரு சிறந்த எழுத்து எதுவென்று கேட்பீர்களானால் நான் இப்படித்தான் சொல்லுவேன்.

அதாவது ஒருவர் எழுதிய கட்டுரையை நாங்கள் படித்துக் கொண்டு போகின்ற பொழுது அவர் என்ன கருத்தைச் சொல்ல நினைத்தாரோ. அந்தக் கருத்து நமது மனதிலே ஒரு படமாக விழுந்து கொண்டே போக வேண்டும். அதில் குழப்பமேற்பட்டால், அந்த எழுத்தாளர் சிறந்த எழுத்தாளராக மாட்டார். தான் எழுதுகின்ற எண்ண அலைகளைப் படம் போல மற்றவர்களுடைய மனதிலே பிரதிபலிக்கச் செய்கின்ற ஆற்றலுடைய எவரோ, அவரைத்தான் நான் சிறந்த எழுத்தாளர் என்று சொல்லுவேன்.

உதாரணமாக நான் எந்த விடயத்தை எழுதினாலும் அது அரசியலாக இருந்தாலும் சரி, அல்லது பிரயாணக் கட்டுரையாக இருந்தாலும் சரி, பிறருக்கு எளிதிலே விளங்குகின்றதா என்பதைக் குறிக்கோளாகக் கொண்டுதான் எழுதுவேன்.

என்னுடைய எழுத்துக்கு மிகவும் மதிப்பு இருக்கிறது என்று ஆரம்பத்தில் சொன்னீர்கள். அதன் ரகசியம் தெளிந்த நடையில் விளக்கமாக எழுதுவதுதான்.

கேள்வி:- வளர்ந்து வரும் எழுத்தாளர்கள் நிச்சயமாக உங்கள் ஆலோசனைகளை ஏற்றுக்கொண்டு அதன்படி செயற்படுவார்கள் என்று நினைக்கிறேன். இந்த நிகழ்ச்சியில் நீங்கள் விரும்பும் பாடல் ஒன்றினை நாங்கள் கேட்க ஆசைப்படுகிறோம்.

பதில்:- எனக்குப் பாடல்கள் என்றால் ரொம்பப் பிடிக்கும். விரும்பிக் கேட்பேன். திடீரென்று கேட்டால் எந்தப் பாடலை சொல்வதென்றுதான் தெரியவில்லை.

"கீதை சொன்ன கண்ணன் தேரில் வருகிறான்" என்று சீர்காழி கோவிந்தராஜன் பாடிய பாடல் எனக்கு ரொம்ப ரொம்பப் பிடிக்கும்.

அது மட்டுமல்ல கவிஞர் பாரதிதாசனின் "துன்பம் நேர்கையில் யாழெடுத்து நீ இன்பம் சேர்க்க மாட்டாயா?" என்ற பாடலும் பிடிக்கும். கவிஞர் வைரமுத்து எழுதி "அன்புள்ள அப்பா" படத்தில் இடம் பெற்ற "அன்புள்ள அப்பா உங்கள் காதல் கதையைக் கேட்டால் தப்பா?" என்ற பாடல் அருமையான மிகச் சிறந்த பாடல் என்பது என்னுடைய கருத்து.

அதே போல எங்களுடைய நாட்டுச் சினிமா நடிகர் சந்திரபாபு பாடிய "பிறக்கும் போதும் அழுகின்றாய். இறக்கும்போதும் அழுகின்றாய். ஒரு நாளேனும் கவலை இல்லாமல் சிரிக்க மறந்தாய் மானிடனே" - என்ற பாடலைக் கேட்கும் பொழுது உடம்பெல்லாம் புல்லரிக்கும்.

"அந்த நாள் முதல் இந்தநாள் வரை வானம் மாறவில்லை. ஆனால் மனிதன் மாறிவிட்டான் " என்ற பாடலும் எனக்குப் பிடித்தமான பாடல்தான். இப்படி எத்தனையோ பாடல்களைச் சொல்லலாம். ஆனால் அவ்வளவையும் நான் கேட்டு உங்களைத் தொந்தரவு செய்யப் போவதில்லை. முதலில் நான் சொன்னேனே, "கீதை சொன்ன கண்ணன் தேரில் வருகிறான்" என்று. அந்தப் பாடலையே போடுங்கள். நானும் நேயர்களும் கேட்டு ரசிக்கிறோம் என்று கூறித் தன் பேட்டியை முடித்துக்கொண்டார்.

- இப்படித் தம் பேட்டியில் தெரிவித்தார் எஸ்.டி.சிவநாயகம் ஐயா.

- எழுத்துத் துறையுடன் தொடர்புபட்ட பிற பிரமுகர்கள் பார்வையில் அவர் எப்படித் தோற்றினார் என்ற சில குறிப்புகளை நாளை பகிர்வேன்.

(வளரும்......)

# மகாகவி பாரதிக்கு .......

(09ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால், ஒரு சம்பவம் மனதை இன்றும் நெருடுகிறது.

உங்கள் மகள் வயிற்றுப்பேத்தியின் மகள் மீராவுடன் - அதாவது உங்கள் கொள்ளுப்பேத்தியுடன் ஒரு சந்தர்ப்பத்தில் தொலைபேசி ஊடாக உரையாடினேன். அவர் தற்போது அமெரிக்காவில் வாழ்கிறார்.

அப்பொழுது அவர் ஆஸ்திரேலியா சிட்னிக்கு வந்திருந்தார். தகவல் அறிந்து தொடர்புகொண்டேன். உங்கள் பேத்தி விஜயபாரதியின் மகள்தான் மீரா. தனது கணவர் சுந்தரராஜனுடன் விஜயபாரதி இலங்கையில் எங்கள் ஊருக்கும் வந்து பேசியிருக்கிறார். உங்கள் பாடல்களை இனிமையாகப் பாட வல்லவர். சிட்னி வந்த அவரது மகள் மீராவுடன் தமிழில்தான் பேசினேன்.

மன்னிக்கவேண்டும் என்னால் தமிழில் சரளமாகப் பேசமுடியாது. - என்று ஆங்கிலத்தில் சொன்னார்.

ஓ...பாரதி... என்று உரத்துக்கத்தினேன் மனதுக்குள்.

நான் திகைத்தேன்.

"அப்படியென்றால் என்ன செய்கிறீர்கள்?" - எனக் கேட்டேன்.

உங்களது ஆங்கிலக் கட்டுரைகளைத்தான் அவர் ஆய்வுசெய்கிறார் எனச் சொன்னார். அந்தளவில் ஆறுதல் பெற்றேன். அவர் வாழும் அமெரிக்கச்சூழல் அவருடைய பேச்சுமொழியில் தமிழை அந்நியப்படுத்த விட்டிருக்கலாம். இக்காலத்தில் தமிழர் புகலிட நாடுகளில் பெரும்பாலான தமிழ் வீடுகளில் இதுதான் நிலைமை. இந்த இலட்சணத்தில் வெளிநாடுகளில் - தமிழர் புலம் பெயர்ந்த தேசங்களில் எதிர்காலத்தில் தமிழ் வாழுமா..? தாழுமா..? என்று எம்மவர்கள் பட்டிமன்றம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால், நீங்களோ.. தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும்வகை செய்திடுவோம் என்றும் தெருவெங்கும் தமிழ்முழக்கம் செய்வோம் என்றும் பாடி வைத்துவிட்டுப் போய்விட்டீர்கள். நீங்கள் பிறந்து வளர்ந்து மறைந்த பொன்னாட்டில் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் தமிழுக்கு பஞ்சம் வந்துகொண்டிருக்கிறது.

மகாகவியே..! உங்களது எட்டயபுரம் தரிசித்தேன். நீங்கள் இறுதியாக வாழ்ந்த திருவல்லிக்கேணி இல்லத்தையும் நீங்கள் வாழைப்பழம் உண்ணக்கொடுத்த மதம்கொண்ட யானை வாழ்ந்த பார்த்தசாரதி கோயிலையும் தரிசிக்க வந்தேன். உங்களை உங்கள் நண்பர் குவளைக்கண்ணன் அச்சமயம் யானையிடமிருந்து உங்களை மீட்டார் என வரலாறு சொல்கிறது. எனினும் காலன் உங்களை அழைத்துக்கொண்டான். காலனையே தூரப்போ என்று கவியால் கலைத்தவர் நீங்கள்.

உங்கள் இறுதிமூச்சு விடப்பட்ட திருவல்லிக்கேணி இல்லத்தை தொட்டு வணங்கியவாறே உள்ளே சென்றேன். நான் சென்றபோது அன்றைய முதல்வர் அம்மாதான்!

முதல்வர் அம்மாவின் படங்கள். சென்னையில் திரும்பிய பக்கமெல்லாம் காணப்பட்ட காலம் அது. எங்கும் அவரது உருவம்தான். வாழ்த்த வயதில்லை வணங்குகிறோம் என்ற சுவரொட்டிகள்தான். அவரது காலில் விழுந்து ஆசிபெற்றவர்களை அறிவீர்களா..?

பாரதி இல்லத்தையும் அந்த அம்மா அன்று ஆக்கிரமித்திருந்தார்! அவரது அமைச்சரவையில் தகவல் அமைச்சும் இருந்தது. அந்த அமைச்சுதான் உங்கள் இல்லத்தையும் அன்று பராமரித்தது. அதனால் தகவல் அமைச்சின் தகவல் பலகையில் அம்மா ஆரோகணித்துவிட்டார்கள்.

அந்த இல்லம் புனரமைக்கப்பட்டு திறந்துவைக்கப்பட்ட சமயத்திலும் அம்மாதான் ஆட்சிக்கட்டிலில். அதனால் அவரது படங்களுக்கு அங்கு முன்னுரிமை.

உங்களை பார்ப்பான் என வர்ணித்து வைத்த திராவிட இயக்கத்தில் வந்தவர்கள் கவனிக்கவில்லை. புறக்கணித்தார்கள். ஆனால், அந்த அம்மா திருவள்ளுவர் ஆண்டு 2024 புரட்டாசித் திங்கள் 16 ஆம் நாள் அதாவது 2-10-1993 ஆம் திகதியன்று அந்த இல்லத்தை சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைத்து தகவல் அமைச்சிடம் பாராமரிப்புக்கு ஒப்படைத்துவிட்டார். அதனாலும் அம்மா ஜெயலலிதா அங்கே காட்சிப்படுத்தப்பட்டிருந்தார்.

அந்த இல்லத்தில் ஏராளமான ஒளிப்படங்களைப் பார்த்தேன். உங்களுடன் வாழ்ந்தவர்கள் மட்டுமன்றி உங்களுக்காக வாழ்ந்தவர்களும், உங்கள் புகழை பரப்பியவர்களும் அவற்றில் இருக்கிறார்கள். உங்கள் நூற்றாண்டு காலத்தில் டில்லியில் முன்னாள் பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தியும் முன்னாள் தமிழக முதல்வர் எம்.ஜி.ஆரும் உங்கள் சிலையை திறந்து வைத்திருக்கிறார்கள்.

சுருக்கமாகச்சொன்னால் அது ஒரு ஆவணகாட்சியகம்தான்.

ஒரு நூலகத்தை அங்கு நடத்துகிறார்கள். வெளிவிறாந்தையில் தினசரி வெளியாகும் பத்திரிகைகள் படிப்பதற்கு ஒரு பெரியமேசையும் கதிரைகளும் வைத்து வாசகர்களின் தேவையைப் பூர்த்தி செய்கிறார்கள்.

நூலகம் என்றால் அங்கு அமைதி பேணப்படல் வேண்டும். ஆனால், உள்ளே இருக்கும் மேசைகளை சுற்றிவர அமர்ந்துள்ள அலுவலர்கள் ஊர்வம்பு பேசிக் கொண்டிருந்தார்கள். நான் அமைதியாக அந்த புனித இல்லத்தைச் சுற்றிவந்தேன்.

ஒரு அலுவலரிடம் சென்று அந்த இல்லத்தின் தோற்றம், வரலாறு பற்றிய ஏதும் பிரசுரம் இருக்கிறதா? எனக்கேட்டேன்.

அப்படி ஒன்றும் இல்லை என்றார்.

ஏமாற்றம்தான் !

நீங்கள் வாழ்ந்த காலத்தில் பலரால் ஏமாற்றப்பட்டவர் நீங்கள். ஆயினும், தேடிச் சோறு நிதந்தின்னும் வேடிக்கை மனிதரைப் போல வீழ்ந்துவிடுவேன் என நினைத்தாயோ என்று நெஞ்சை நிமிர்த்தி கேட்டவர் நீங்கள்.

அந்த வரிகள்தான் எமக்கு ஆன்மபலம் தருகிறது.

என்று தணியும் எங்கள் சுதந்திர தாகம்... என்று ஏங்கியவர் நீங்கள். ஒரு நாள் நள்ளிரவிலேயே நீங்கள் நிரந்தரமாக கண்களை மூடினீர்கள். பல ஆண்டுகள் கழித்து ஒரு நள்ளிரவு வேளையில்தான் உங்கள் கனவு நனவாகியது. பாரத நாடு சுதந்திரம் பெற்றது.

உங்கள் வாரிசாக வந்த ஒரு கவிஞர் இப்படி எழுதினார். அது அப்போது பெரிதும் பேசப்பட்ட புதுக்கவிதை.

சுதந்திரம்
இரவிலே வாங்கினோம்.
இன்னும் விடியவே இல்லை.

பாரதியே... உங்கள் கனவுகள் பல இன்னும் நனவாகவில்லை. காத்திருக்கிறோம்.

# பன்முக நோக்கில்...

(10ஆம் பக்கத் தொடர்ச்சி)

தெய்வத்தை நம்புகிறார். பராசக்தியிடம் வேண்டுகிறார். சரஸ்வதியிடம் வேண்டுகிறார். ஆனால் சாத்திரங்கள் எனக்கூறி சமூகநீதிக்கு எதிராய் வருவதை மூர்க்கமாய் எதிர்க்கிறார். 'சாத்திரங்கள் ஒன்றுங்காணார் - பொய்ச் சாத்திரப் பேய்கள் சொல்லும் வார்த்தை நம்பியே' என்றும், 'உங்கள் சூனியப்பொய்ச் சாத்திரங்கள் கண்டு நகைப்பான்", "பேயரசு செய்தால் பிணந்தின்னும் சாத்திரங்கள்' என்றும், 'சூத்திரனுக்கொரு நீதி - தெண்டச் சோறுண்ணும் பார்ப்புக்கு வேறொரு நீதி சாத்திரம் சொல்லுமாயின் - அது சாத்திரம் மன்று சதியென்று கண்டோம்' என்று பாரதியார் நிற்கும் நிலை அவரின் படைப்புகளின் பன்முகமாய் தெரிகிறது அல்லவா?

பாரதியாரின் படைப்புகளை ஒவ்வொன்றாக எடுத்து நோக்கினால் அங்கு பன்முகங்கள் தென்படுவதைக் கண்டுதெளியலாம். அவரின் படைப்புகள் பன்முக நோக்கினையே பறைசாற்றி நிற்கின்றன என்பதை நுணுகிப் பார்க்கும் வேளை கண்டுகொள்ளலாம். கடவுளரைப் பாடுகிறார். பராசக்தியின் உபாசனா தெய்வமாகவே தெரிகிறது. பாரதியாருக்கு முன்னர் வந்த பக்திப்பாடல்கள் சிவலோகம் பற்றியும் வைகுந்தம் பற்றியும் காட்டி நிற்க பாரதியார் படைப்பின் நோக்கு வேறுவிதமாய் அமைகிறது. தானும் நலமுற வாழ வேண்டும் நாட்டு மக்களும் நலமுற வாழவேண்டும். அதற்காகவே தெய்வத்திடம் முறையிடும் புதுமை நோக்கு இப்படைப்பின் பால் வெளிப்பட்டு நிற்கிறது. 'எண்ணில்லாத பொருட்குவைதானும் ஏற்றமும் புவியாட்சியும் தருவன் இன்றெனத் தன்னையென் காளி மண்ணில் யார்க்குந் துயரின்றிச் செய்வேன், வறுமையென்பதை மண்மிசை மாய்ப்பேன்' என்று பாரதியாரின் வேண்டுகோளைக் காட்டி நிற்கும் இப்படைப்பின் நோக்கு பரந்து பட்டதாய் சுயநலம் அற்றதாய் விளங்குவது புலப்பட்டு நிற்கிறதல்லவா?

மண்ணில் நல்லவண்ணம் வாழலாம் என்னும் நம்பிக்கை பாரதியாரின் படைப்புகள் வாயிலாக வெளிப்பட்டு நிற்பதைக் கண்டு பெருமிதம் கொள்ள வேண்டும். 'உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதிலும் அச்சமில்லை அச்சம் இல்லை' - இது நம்பிக்கையின் உச்சம்!, 'ஓடி விளையாடு பாப்பா நீ ஓய்ந்திருக்கலாகாது பாப்பா - தெய்வம் நமக்குத்துணை பாப்பா ஒரு தீங்கும் வரமாட்டாது பாப்பா' - உற்சாகமூட்டும் உரம்!, 'ரௌத்திரம் பழகு', 'தையலை உயர்வு செய்', 'தொன்மைக்கு அஞ்சேல்', 'போர்த்தொழில் பழகு ', 'நேர்படப்பேசு', 'வெடிப்புறப்புறப் பேசு' - இவை ஊக்க மருந்தாகும். 'எத்தனை கோடி இன்பம் வைத்தாய் எங்கள் இறைவா இறைவா' இவ்வாழ்வினை அனுபவித்துவிடு என்று காட்டும் பெருவெளிச்சம்.

பாட்டுப் பாடியதும், கட்டுரை கதை எழுதியதும், ஊடகத்துறையில் இருந்ததும் என்றெல்லாம் பாரதியின் படைப்பின் பன்முகம் வெளிப்பட்டாலும் அத்துடன் அச்சிந்தனை நின்றுவிடவில்லை. தமிழ் அறிவியலுடன் இணைதல் வேண்டும் என்னும் பன்முக நோக்கும் புலப்பட்டு நிற்கிறது. 'புத்தம் புதிய கலைகள் பஞ்சப் பூதச்செயல்களின் நுட்பங்கள் கூறும் - மெத்த வளருது மேற்கே அந்த மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை', 'சென்றிடுவீர் எட்டுத்திக்கும் கலைச் செல்வங்கள் யாவுங் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்', 'பிற நாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ்மொழியிற் பெயர்த்தல் வேண்டும், இறவாத புகழுடைய புது நூல்கள் தமிழ் மொழியில் இயற்றல் வேண்டும்' - இங்கு பாரதியின் படைப்பின் வாயிலாக தெரிகின்ற பன்முகங்கள்தான் பாரதியாரையும் அவரது படைப்புகளையும் இன்றுவரை உயர்வுடன் பார்க்க வைக்கின்றன.

காலைக்கதிர்
Kalaikkathir

# மாணவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய தடுப்பூசிகள் அம்பாந்தோட்டைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளன

## சம்பிக்க ரணவக்க சாடல்



இளம் அமைச்சரின் தேவைக்காகவா அம்பாந்தோட்டை மாவட்டத்திற்கு பைஸர் கொவிட்–19 தடுப்பூசிகள் வழங்கப்பட்டுள்ளன. பாடசாலை மாணவர்களுக்கு பொருத்தமானது என அங்கீகரிக்கப்பட்டுள்ள பைஸர் தடுப்பூசியை மாணவர்களுக்கு வழங்கி எதிர்வரும் ஜனவரி மாதம் பாடசாலைகளைத் திறப்பதற்கான நடவடிக்கையை அரசாங்கம் பொறுப்புடன் முன்னெடுக்க வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

கொழும்பில் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்–

கொவிட்–19 தடுப்பூசி விடயத்தை அரசாங்கம் தனது அரசியல் தேவைக்காக பயன்படுத்திக் கொள்வதை முதலில் தவிர்த்துக் கொள்ள வேண்டும். கொவிட் விடயத்தில் அரசியல் காரணிகளை அடிப்படையாகக் கொண்டு தீர்மானங்கள் எடுக்கப்பட்டதன் விளைவை இன்று நாட்டு மக்கள் எதிர்க் கொள்கிறார்கள்.

கொவிட் தடுப்பூசி இன்று அரசியல்மயப்படுத்தப்பட்டுள்ளது. அரசியல்வாதிகளின் தேவைக்காக கொவிட்–19 தடுப்பூசிகள் பகிர்ந்தளிக்கப்படுகின்றன. சுகாதாரத் தரப்பினரது ஆலோசனைக்கு அமைய தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகள் முன் னெடுக்கப்படவில்லை.

இளம் அமைச்சரின் தேவைக்காகவா பைஸர் தடுப்பூசிகள் அம்பாந்தோட்டை மாவட்டத்திற்கு வழங்கப்பட்டுள்ளன. கொவிட் தடுப்பூசி வழங்கலில் ஆரம்பத்தில் இருந்து முறைகேடுகள் இடம் பெற்றுள்ளன.

பைஸர் தடுப்பூசி பாடசாலை மாணவர்களுக்கு வழங்கலாம் என அங்கீகரிக்கப்பட்டுள்ளது. ஆகவே பாடசாலை மாணவர்களுக்கு துரிதமாக பைஸர் தடுப்பூசிகளை வழங்கி எதிர்வரும் ஜனவரி மாதம் பாடசாலைகளை திறப்பதற்கான நடவடிக்கையை அரசாங்கம் முன்னெடுக்க வேண்டும்.

ஆசிரியர்கள் தங்களின் உரிமைகளுக்காகவே போராடுகிறார்கள். இவர்களின் கோரிக்கைக்கு தீர்வு வழங்க அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்கவில்லை. மாறாக ஆசிரியர்களை படுமோசமானவர்கள் என்றும், கொவிட் வைரஸ் பரவலை தீவிரப்படுத்திய வர்கள் என்றும் ஆளும் தரப்பினர் விமர்சிக்கின்றார்கள். இவை முற்றிலும் வெறுக்கத்தக்க செயற்பாடு.

ஆசிரியர்கள் போராட்டத்தில் கலந்து கொண்டதால் தான் கொவிட் வைரஸ் தொற்றுக்குள்ளாக்கி மரணித்துள்ளார்கள் என அரசாங்கத்துக்கு ஆதரவானவர்கள் சமூக வலைத்தளங்களில் பதிவேற்றம் செய்துள்ளமை எதிர்கால தலைமுறையினரது கல்விக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தும். ஆகவே ஆசிரியர்கள் விவகாரத்தில் அரசாங்கம் கௌரவமாக நடந்துக் கொள்ள வேண்டும். – என்றார்.



# வியட்நாமுடன் இருதரப்பு ஒத்துழைப்பு குறித்து பேச்சு

இலங்கை மற்றும் வியட்நாமுக்கு இடையில் அரசியல், பொருளாதார மற்றும் கலாசாரத் தளங்களில் ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவதற்கான இலங்கையின் ஆர்வத்தை வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கைக்கான வியட்நாம் தூதுவர் ஹோ தி தன் ட்ரூக் மற்றும் வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் ஆகியோருக்கிடையிலான சந்திப்பு கடந்த புதன்கிழமை வெளிநாட்டலுவல்கள் அமைச்சில் இடம் பெற்றது. இதன் போதே அமைச்சர் இதனை வலியுறுத்தினார்.

இதன்போது வியட்நாம் மற்றும் இலங்கைக்கு இடையேயான இராஜதந்திர உறவுகளை ஸ்தாபித்ததன் 50 ஆவது ஆண்டு விழா 2020 இல் நடைபெற்றதனை நினைவு கூர்ந்த அதே வேளை, இலங்கை மற்றும் வியட்நாமுக்கு இடையே பரஸ்பரம் நன்மை பயக்கும் கூட்டணியை அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் பாராட்டினார். அரசியல், பொருளாதார மற்றும் கலாசாரத் தளங்களில் ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவதற்கான நாட்டின் ஆர்வத்தை மீண்டும் அமைச்சர் வலியுறுத்தினார்.

2009 இல் இடம்பெற்ற ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் வியட்நாமுக்கான உத்தியோகபூர்வ விஜயம் உட்பட இரு நாடுகளுக்கும் இடையேயான வழக்கமான உயர் மட்டத் தொடர்புகளையும் அவர் நினைவு கூர்ந்தார்.

அரசியல் உறவுகளில் அனைத்து நிலைகளிலும் கவனம் செலுத்துவதோடு, வர்த்தகம் மற்றும் முதலீடு, விவசாயம், மீன்வளம், விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம், கல்வி, கலாசாரம் போன்ற துறைகளில் இலங்கைக்கும் வியட்நாமுக்கும் இடையேயான ஒத்துழைப்பின் பன்முகத் தன்மையை தூதுவர் ட்ரூக் விவரித்தார்.

சர்வதேச அரங்குகளில் வியட்நாம் இலங்கைக்கு வழங்கிய ஆதரவுகளுக்கு அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் பாராட்டுக்களைத் தெரிவித்ததுடன், பரஸ்பரம் ஆர்வமுள்ள பகுதிகளில் ஒத்துழைப்பை வரவேற்றார்.

## வலிகாமம் வடக்கு பிரதேசசபை

# காங்கேசன்துறை உப அலுவலகம் 31 வருடத்தின் பின் சொந்த இடத்தில்!

வலிகாமம் வடக்கு பிரதேசசபையின் காங்கேசன்துறை உப அலுவலகம் மற்றும் நூலகம் என்பன 31 வருடங்களின் பின் மீளவும் காங்கேசன்துறையில் நேற்று (வெள்ளிக்கிழமை) முதல் இயங்க ஆரம்பித்துள்ளன.

வலி.வடக்கு பிரதேசசபை தவிசாளர் சோ.சுகிர்தன் தலைமையில் காங்கேசன்துறையைச் சேர்ந்த உறுப்பினர்களின் பங்குபற்றலுடன் விநாயகர் சதுர்த்தியான நேற்றைய தினம் பால்காய்ச்சி உப அலுவலகப் பணிகள் மீள காங்கேசன்துறை நடேஸ்வரக் கல்லூரிக்கு முன்பாக மீள ஆரம்பிக்கப்பட்டன.

நாட்டில் ஏற்பட்ட யுத்தத்தால் காங்கேசன்துறையில் அமைந்துள்ள வலி.வடக்குப் பிரதேசசபையின் தலைமைக் காரியாலயம் மற்றும் உப அலுவலகம் என்பன 1990 ஆம் ஆண்டு சொந்த இடத்தில் இயங்கமுடியாமல் போனது.

காங்கேசன்துறை தலைமைக் காரியாலயம் அமைந்துள்ள பகுதி இன்னமும் விடுவிக்கப்படவில்லை. இந்த நிலையில் உப அலுவலகம் 31 வருடங்களுக்குப் பின்னர் மீள காங்கேசன்துறையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை அந்தப் பிரதேச மக்களுக்கு வரப்பிரசாதமாகும்.



# சட்டவிரோதமாகக் கடத்தப்பட்ட மரக்குற்றிகளுடன் மூவர் கைது

## புத்தளத்தில் சம்பவம்

ஒட்டுச்சுட்டான் பகுதியிலிருந்தும் முருங்கன் பகுதியிலிருந்தும் பியகம பகுதிக்கு அனுமதிபத்திரமில்லாமல் சட்டவிரோதமாகக் கொண்டு செல்லப்பட்ட பெறுமதிவாய்ந்த மரக்குற்றிகளுடன் புத்தளம் – அநுராதபுரம் வீதியின் 6ஆம் கட்டை மற்றும் 7ஆம் கட்டைப் பகுதியில் 3 பேர் கைது செய்யப்பட்டனர் என வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

சந்தேகத்திற்கிடமான லொறியைச் சோதனையிட்ட போதே இவ்வாறு குறித்த மூவரும் பெறுமதிவாய்ந்த மரக்குற்றிகளுடன் கைது செய்யப்பட்டனர் என வனஜீவராசிகள் திணைக்களத்தினர் தெரிவித்தனர்.

இதையடுத்து குறித்த சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை கருவெலகஸ்வெள வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

# நாட்டிலுள்ள வைத்தியசாலைகளில் ஒட்சிசன் பயன்பாடு வீழ்ச்சியடைவு

நாடளாவிய ரீதியிலுள்ள வைத்தியசாலைகளில் ஒட்சிசன் பயன்படுத்தப்படும் அளவு கடந்த காலங்களுடன் ஒப்பிடுகையில் தற்போது குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியடைந்திருப்பதாக சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார். கொரோனா வைரஸ் பரவல் தொடர்பான இணையவழிக்கூட்டத்தில் கலந்துகொண்டு மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ள அமைச்சர்– கடந்த காலங்களில் நாளொன்றில் பயன்படுத்தப்பட்ட ஒட்சிசனின் அளவு சில சந்தர்ப்பங்களில் 140 தொன் வரையிலும் அதிகரித்ததாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார். மேலும் கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காகத் தற்போது முன்னெடுக்கப்பட்டுவரும் நடவடிக்கைகள் மற்றும் தடுப்பூசி வழங்கல் பணிகள் காரணமாக வைரஸ் பரவல் ஒப்பீட்டளவில் முன்னரை விடவும் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டிருப்பதாகக் கூறியுள்ள அவர், வைரஸ் பரவலை முழுமையாக இல்லாதொழிப்பதற்கு அனைத்துத் தரப்பினரது ஒத்துழைப்பும் அவசியமாகும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

அதுமாத்திரமன்றி கண்டி மாவட்டத்துக்கு இரண்டாம் கட்டத்தடுப்பூசியை வழங்குவதற்கு அவசியமான ஸ்புட்னிக் வி தடுப்பூசிகளை இயலுமானவரை விரைவாகப் பெற்றுக் கொள்வதற்கு அவசியமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன எனவும் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல உறுதியளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 28.08.2021 இல் வெளியிடப்பெற்றது.

# தமிழரசுக் கட்சி மீது விஷமப் பிரசாரம்!

## கட்சியின் தலைமை பகிரங்க குற்றச்சாட்டு

(இ.கலையமுதன்)

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு எதிராக சர்வ தேச விசாரணை முன்னெடுக்கப்பட வேண்டும் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சி கோரிக்கை விடுத்து ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபைக்கு அறிக்கை எழுதியுள்ளதாக வெளியாகும் தகவல் உண்மைக்குப் புறம்பானவை என்றும், அவை விஷமத்தனமான பொய்ப்பிரச்சாரம் என்றும் கட்சியின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்திலுள்ள தமிழரசுக் கட்சி தலைமை அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்ட வாறு கூறினார்.

குறித்த ஊடகவியலாளர் சந்திப்பில் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, பதில் செயலாளர் ப.சத்தியலிங்கம், சிரேஷ்ட பிரதித் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் மற்றும் கட்சியின் நிர்வாகச் செயலாளர் குலநாயகம் ஆகியோரும் பங்கு கொண்டிருந்தனர்.

அங்கு கருத்துத் தெரிவித்த சுமந்திரன் எம்.பி.,

தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட உறுப்பினர்களால் கையெழுத்திடப்பட்டு ஐ.நா. மனித உரிமைகள் சபைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதம் தொடர்பான உண்மைத் தன்மை தொடர்பில் எமக்குத் தெரியாது.

அதில் கையொப்பமிட்டவர்களாகச் சொல்லப்பட்ட உறுப்பினர்கள் தாம் அவ்வாறு கையொப்பமிடவில்லை என்று தெரிவித்துள்ளனர்.

எனவே, அவ்வாறு அவர்களின் கையொப்பங்கள் தவறாகப் பயன்படுத்தப்பட்டிருந்தால் அதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டிய நிலை ஏற்படலாம்.

கடந்த 2012ஆம் ஆண்டிலிருந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது இலங்கையில் தமிழ் மக்கள் மீது அரசால் மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்களுக்கு நீதி கோரி உலக நாடுகளுடன் பேச்சு நடத்தி ஐக்கிய நாடுகள் சபையில் இலங்கைக்கு எதிராக ஒரு தீர்மானத்தைக் கொண்டுவந்திருக்கின்றோம். அது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் எடுக்கப்பட்ட முயற்சியின் பயனாகக் கிடைத்தது. அது அனைவரும் அறிந்த விடயமாகும்

ஆனால், தற்போது இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு எதிராக ஒரு விஷமப் பிரச்சாரம் மேற்கொள்ளப்படுகின்றது. புலிகளால் மேற்கொள்ளப்பட்ட குற்றங்களையும் விசாரிக்கக் கோரி சம்பந்தனால் ஓர் ஆவணம் அனுப்பப்பட்டது எனச் சொல்லப்படுகின்றது. அது முற்றிலும் ஒரு பொய்யான விடயம். இந்த விடயத்தில் ஊடகங்களும் பொறுப்புணர்வோடு செயற்பட வேண்டும். அதாவது ஒரு விடயத்தைச் செய்தியாகப் பிரசுரிக்கும் போது அதனை ஆராய்ந்த பின் செய்தியாகப் பிரசுரிக்க வேண்டும். அத்தோடு தமிழரசுக் கட்சி தனியாகச் செயற்படப் போகின்றது என்றும், கூட்டமைப்பிலிருந்து பிரிந்து செயற்படுகின்றது என்றும் தற்போது குற்றச்சாட்டும் முன்வைக்கப் படுகின்றது.

அவ்வாறான ஒரு சம்பவம் இடம்பெறாது. எந்தக் காலத்திலும் இலங்கைத் தமிழரசுக் கட்சியானது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ஏனைய கட்சிகளுடன் இணைந்து செயற்படுமே தவிர ஒருபோதும் தனித்துச் செயற்படுவதற்குத் தயாராக இல்லை.

எந்தளவுக்கு இணைந்து செயற்பட முடியுமோ அந்தளவுக்கு இணைந்து செயற்படுகின்றோம். அத்தோடு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ஏனைய கட்சிகள் எம்முடன் நல்ல உறவாக உள்ளார்கள். அவர்களும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இணைந்து



செயற்படுகின்றோம் எனக் கூறுகின்றார்கள்

நாங்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் ஒற்றுமையாக செயற்படுகின்றோம். எனினும், கூட்டாகச் செயற்படும் போது பல பிரச்சினைகள், முரண்பாடுகள் ஏற்படும். ஆனால், தமிழ் மக்களுக்காகப் பயணிக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினராகிய நாங்கள் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பிரிந்தோ அல்லது தனித்தோ செயற்படவில்லை - என்றார்.

# பிரதமர் மஹிந்த இத்தாலி பயணம்

உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இத்தாலி பயணமானார்.

பிரதமரும், வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் உள்ளிட்ட தூதுக் குழுவினரும் நேற்று அதிகாலை கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் இருந்த இத்தாலிக்குப் புறப்பட்டனர் என்று பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இந்த விஜயத்தின்போது பிரதமர் ஜி20 சர்வமத மற்றும் கலாசார மாநாடு - 2021 இன் ஆரம்ப நிகழ்வில் கலந்து கொண்டு தலைமை உரை ஆற்றவுள்ளமையுடன், இராஜதந்திர சந்திப்புகளிலும் கலந்துகொள்ளவுள்ளார் என்று பிரதமர் அலுவலகம் குறிப்பிட்டுள்ளது.



இத்தாலிக்கு விஜயம் மேற்கொள்ளும் பிரதமர் வத்திக்கானில் பாப்பரசரைச் சந்திக்கவுள்ளார் என்று தகவல்கள் வெளியாகியிருந்த நிலையில், அவ்வாறான சந்திப்பு நடக்காது என்று பிரதமர் அலுவலகம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## சம்பந்தன் அனுப்பிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அவரது அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையில் ஒரு போர்க்குற்றம் நடைபெற்றது, இன அழிப்பு நடைபெற்றது என்பது தெட்டத் தெளிவான உண்மை. காணாமல்போனோர் பற்றியோ அல்லது நில ஆக்கிரமிப்புக்கள் பற்றியோ இன்று எந்தவிதமான முன்னேற்றமும் இல்லை. தமிழர்கள் அடக்கிய ஆளப்படுகின்ற ஒரு நிலையே இங்கு காணப்படுகின்றது.

ஐ.நாவுக்கு அனுப்பப்பட்ட கடிதம் தொடர்பில் பல்வேறு விமர்சனங்களும் குற்றச்சாட்டுகளும் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகளில் ஒன்றான ரெலோ அமைப்பினூடாக எங்களுக்கு அனுப்பப்பட்ட கடிதத்தில் நாங்கள் எந்தக் கையொப்பமும் இடவில்லை.

அதேபோல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரனால் மின்னஞ்சல் ஊடாக அனுப்பி வைக்கப்பட்ட கடிதத்தில் இருதரப்பும் போர்க்குற்றத்தில் ஈடுபட்டவர்கள் என்ற விடயம் உள்ளடக்கப்பட்டு இருக்கின்ற காரணத்தால் அது பற்றி நாங்கள் ஆராயவேண்டும் என்று தெரிவித்திருந்தோம். காரணம் இது ஒரு தரப்பு களத்தில் இல்லை. மற்றைய தரப்பான அரசு இந்த நாட்டினுடைய இறைமையுள்ள அரசை நடத்துகின்ற ஓர் அரசாங்கம் தன் குடிமக்கள் மீது போர்க்குற்றத்தை நடத்தியுள்ளது; குண்டுகளை வீசி மக்களைப் படுகொலை செய்திருக்கின்றது. பாதுகாப்பு வலயங்கள் என்ற போர்வையில் மக்களை அழைத்து அதற்குள் குண்டு போட்டுக்கொலை செய்துள்ளது.

இங்கு ஓர் இன அழிப்புப் போர்க்குற்றம் புரியப்பட்டுள்ளது. அதில் ஒரு தரப்பு இல்லாவிடின் அதனை எவ்வாறு விசாரிப்பது? கண்முன்னே நடந்த இனப்படுகொலைக்கு அதில் குறிப்பிட்ட விடயம் எங்களுக்கு ஒத்துவரக் கூடியதாக இருக்கவில்லை. அது பற்றி கடந்த திங்கட்கிழமை ஆராயலாம் எனத் தீர்மானித்த நிலையில் ஞாயிற்றுக்கிழமை இணைய வழியிலான ஒரு கலந்துரையாடலின்போது சம்பந்தன் ஐயா குறித்த கடிதத்தை ஒரு தனிமனிதனாக அனுப்பிவிட்டார் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் குறிப்பிட்டிருந்தார்.

சம்பந்தன் அதனை அனுப்பியிருந்தால் நாங்கள் எதனையும் செய்ய முடியாது. காரணம் அவர் சிங்கக் கொடியை பிடித்து விட்டு காளியின் கொடி என்று சொல்லுவார். மக்கள் அதனை ஏற்றுக் கொள்வார்கள். அவர் நாடாளுமன்றத்தில் புலிகள் ஜனநாயகத்தை மதிக்கவில்லை; மனித உரிமை மீறல்களைப் புரிந்தார்கள்; அதனால் அவர்கள் அழிந்தார்கள் என்று பேசுவார். அதையும் மக்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்ற நம்பிக்கை அவருக்கு உள்ளது.

ஐ.நாவுக்கு கடிதத்தை அனுப்பி விட்டு இரண்டு தரப்பையும் விசாரிக்க வேண்டும் என்றால் எல்லோரும் ஏற்றுக்கொண்டதாக கருத முடியாது.

சம்பந்தன் அனுப்பி இருக்கின்ற கடிதம் தொடர்பில் நாங்கள் அனைவரும் ஏற்றுக்கொண்டோம் என இல்லை. நாங்கள் இது தொடர்பில் பல்வேறு தரப்பினருடனும் கலந்துரையாடி இருக்கின்றோம்; பேசி இருக்கின்றோம். ஆனால், கடந்த 19ஆம் திகதி நாங்கள் தனித்து அனுப்ப வேண்டிய கடிதத்தை நாங்கள் அனுப்பாமல் தவறி இருக்கின்றோம். இது எங்களிடம் இருக்கின்ற பெரும் தவறு - என்றார்.

# ஐ.நா. பொதுச் சபைக் கூட்டத்தில் கலந்துகொள்கின்றார் ஜனாதிபதி

ஐ.நா. பொதுச் சபைக் கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அமெரிக்காவுக்குப் பயணமாக வுள்ளார்.

ஐ.நா. பொதுச் சபையின் 76 ஆவது அமர்வு நியூயோர்க்கில் எதிர்வரும் 14 ஆம் திகதி முதல் 30 ஆம் திகதி வரையில் நடைபெறவுள்ளது.

இதில் நாட்டின் அரச தலைவர்கள் கலந்துகொள்ளும் உயர்மட்ட அமர்வு எதிர்வரும் 21 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இந்த அமர்வில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கலந்துகொள்ளவுள்ளார் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

## யாழில் இரட்டைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கர்ப்பிணிப் பெண்ணுக்கு மூச்செடுப்பதில் சிரமம் ஏற்பட்டுள்ளது. அதனால் அவர் அன்று தெல்லிப்பழை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். எனினும், அவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். அன்றைய தினமே அவருக்குக் கொரோனாத் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கர்ப்பிணிப் பெண்ணுக்குக் கடந்த புதன்கிழமை ஆண் குழந்தை ஒன்றும், பெண் குழந்தை ஒன்றுமாக இரட்டைக் குழந்தைகள் பிறந்துள்ளன.

அதன்பின்னர் தாயாருக்கான சிகிச்சைகள் தொடர்ந்த நிலையில் நேற்று சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார் என்று இறப்பு விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

இறப்பு விசாரணையை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் முன்னெடுத்தார்.

சடலம் உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் சுகாதார முறைப்படி தகனம் செய்ய அனுமதிக்கப்பட்டது.

## பாடசாலைகளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கொண்ட 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பாடசாலைகள் தொடர்பில் ஆராயப்பட்டது.

இதனைத் தொடர்ந்து பாடசாலைகளைத் திறப்பதற்கான இயலுமை தொடர்பில் ஆராய்ந்து விரைவான பரிந்துரைகளை வழங்குமாறு, சுகாதார மற்றும் கல்வி அதிகாரிகளை உள்ளடக்கிய நிபுணர் குழுவுக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பணிப்புரை விடுத்தார்.

## 2, 832 பேருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஆக அதிகரித்துள்ளது என அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 1,512 பேர் நேற்று குணமடைந்துள்ளனர்.

இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 4 இலட்சத்து 9 ஆயிரத்து 628 ஆக உயர்வடைந்துள்ளது.